மலர்-1 இதழ்-18 மே 16-31 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மாதமிருமுறை

## மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இமெயிலில் வெளிவரும் புத்தகம்



'சோறு கண்ட இடம் சொர்க்கம்'

பகையை நீக்கி, பித்ரு தோஷத்தை குறைத்து, கிரக தோஷத்திலிருந்து காப்பாற்றும்

# பைரவர்

# சதுர்த்தி பூஜையில் அதிக பலனை தரும் 21 இலைகளும் அவற்றின் நன்மைகளும்

சதுர்த்தி பூஜையில் அதிகப்படியான பலனை உடனடியாக பெற வேண்டுமானால் இருபத்தொரு இலைகளும், இருபத்தொரு அறுகம்புல் போன்றவற்றால் விநாயகரை தனித் தனியாக அர்ச்சித்தல் பூஜையின் பலன் விரைவில் கிடைக்கும். 21 இலைகளையும் அந்த இலைகளினால் கிடைக்கும் பலன்களையும் விரிவாக பார்ப்போம்.

1. முல்லை இலை பலன்: அறம் வளரும்
2. கரிசலாங்கண்ணி இலை பலன்: இல்வாழ்க்கைக்குத் தேவையான பொருள் சேரும்.
3. வில்வம் இலை பலன்: இன்பம். விரும்பியவை அனைத்தும் கிடைக்கும்.
4. அறுகம்புல் பலன்: அனைத்து சௌபாக்கியங்களும் கிடைக்கும். 21 அறுகம் புல்களை கொண்டு அர்ச்சிப்பது அதி விசேடமானது.
5. இலந்தை இலை பலன்: கல்வியில் மேன்மையை அடையலாம்.
6. ஊமத்தை இலை பலன்: பெருந்தன்மை கைவரப்பெறும்.
7. வன்னி இலை பலன்: பூவுலக வாழ்விலும், சொர்க்க வாழ்விலும் நன்மைகள் கிடைக்கப்பெறும்.
8. நாயுருவி பலன்: முகப் பொலிவும், அழகும் கூடும்.
9. கண்டங்கத்தரி பலன்: வீரமும், தைரியமும் கிடைக்கப்பெறும்.
10. அரளி இலை பலன்: எந்த முயற்சியிலும் வெற்றி கிட்டும்.
11. எருக்கம் இலை பலன்: கருவிலுள்ள சிசுவுக்கு பாதுக்காப்புக் கிட்டும்.
12. மருதம் இலை பலன்: மகப்பேறு கிட்டும்.
13. விஷ்ணுகிராந்தி இலை பலன்: நுண்ணிவு கைவரப்பெறும்.
14. மாதுளை இலை பலன்: பெரும் புகழும், நற்பெயரும் கிட்டும்.
15. தேவதாரு இலை பலன்: எதையும் தாங்கும் மனோ தைரியம் கிட்டும்.
16. மருக்கொழுந்து இலை பலன்: இல்லற சுகம் கிடைக்கப்பெறும்.
17. அரசம் இலை பலன்: உயர்பதவியும், பதவியால் கீர்த்தியும் கிட்டும்.
18. ஜாதிமல்லி இலை பலன்: சொந்த வீடு, மனை, பூமி பாக்கியம் கிடைக்கப்பெறும்
19. தாழம் இலை பலன்: செல்வச் செழிப்புக் கிடைக்கப்பெறும்.
20. அகத்தி இலை பலன்: கடன் தொல்லையிலிருந்து விடுதலை கிடைக்கும்.
21. தவனம் ஜகர்ப்பூரஸ இலை பலன்: நல்ல கணவன் மனைவி அமையப்பெறுவார்கள் என்பது ஐதீகம்.







# நோய் தீர்க்கும் தெய்வங்களும் வணங்க வேண்டிய கிழமைகளும்

தெய்வங்களை வணங்கினால் மனிதனின் பிரச்சனைகள் அனைத்தும் நீங்கும் என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்றுதான் என்றாலும் ஒரு சில தெய்வங்களின் சக்தி, ஒருசில பிரச்சனைகளை எளிதாக தீர்க்கும் வகையில் அமைந்திருக்கும். உதாரணத்திற்கு தலைவலி மாத்திரையை ஜலதோஷத்திற்கு பயன்படுத்த முடியாததை போன்று ஒருசில சக்திகளை ஒரு சிலவற்றிற்கு பயன்படுத்தினால் நிவாரணம் கிடைக்கும். அந்த வகையில் சில குறிப்பிட்ட நோய்களுக்கு இன்ன தெய்வங்களை வழிபட வேண்டுமே என சுதமா முனிவர் விளக்கமாக எழுதியுள்ளார்.

அதன்படி அதற்குரிய தெய்வங்களை அந்தந்த கிழமைகளில் வழிபட்டால் நோய் நீங்கி நீண்ட ஆயுள் பெறலாம் என்பது ஐதீகம்.

அம்மை நோய்: மாரியம்மன் ஞாயிற்றுக்கிழமை.

வயிறு சம்பந்தமான நோய்கள்: தட்சிணா மூர்த்தி, முருகன் வியாழன், செவ்வாய்.

ஆஸ்துமா மற்றும் சுவாசக் கோளாறுகள்: மகா விஷ்ணு சனிக்கிழமை.

ஆயுள், ஆரோக்கியம்: ருத்திரர் திங்கட்கிழமை.

எலும்பு சம்பந்தமான நோய்கள்: சிவபெருமான், முருகன் திங்கட்கிழமை, செவ்வாய்க்கிழமை.

கண் சம்பந்தமான கோளாறுகள்: சிவபெருமான், முருகன், பிள்ளையார் திங்கள், செவ்வாய், புதன்.

காது மூக்கு தொண்டை நோய்கள்: முருகன் செவ்வாய்

சொறி, சிரங்கு, படை போன்ற தோல் நோய்கள்: சங்கர நாராயணர் வெள்ளிக்கிழமை.

தலைவலி, ஜுரம்: ஜுரஹரேஸ்வரர், பிள்ளையார் திங்கள், புதன்கிழமை.

நீரிழிவு, சிறுநீரகக் கோளாறு: முருகன் செவ்வாய்.

பெண்களுக்கான மாதப் பிரச்னைகள்: ராஜ ராஜேஸ்வரி, வள்ளி, ஸ்ரீரங்கநாதர்ஞாயிறு, செவ்வாய், சனிக்கிழமை.

பித்தப்பைக் கோளாறுகள்: முருகன் செவ்வாய்.

புற்றுநோய்: சிவபெருமான் திங்கட்கிழமை.

மாரடைப்பு, இதயக் கோளாறுகள்: துர்க்கை, சக்தி, கருமாரி, இதயாலீஸ்வரர் திங்கள், ஞாயிற்றுக்கிழமை ராகு காலம்.

ரத்த சோகை, உயர் மற்றும் குறை ரத்த அழுத்தம்: முருகன் செவ்வாய்க்கிழமை.

வாதக் கோளாறுகள்: சனி பகவான், சிவபெருமான் சனிக்கிழமை ராகு காலம்.

வாயுக் கோளாறுகள்: ஆஞ்சனேயர் சனிக்கிழமை.



# பீஷ்மரின் சபதத்தை நிறைவேற்றிய கிருஷ்ணன்

பாரத யுத்தம் நடைபெற்று வந்த சமயத்தில் பீஷ்மர் அம்பு படுக்கையில் மரணத்தை எதிர் நோக்கி காத்துக்கிடந்த சமயத்தில், தருமரும், அவரின் சகோதரர்களும் மிகுந்த வருத்தத்துடன் பீஷ்மரை காண வந்திருந்தனர்.

பாண்டவர்களை இதுநாள்வரை காத்து வந்ததால் பீஷ்மரை தெய்வமாகவே பாண்டவர்கள் கருதி வந்தனர். அவர்களை பார்த்து பீஷ்மர் ஒருசில உண்மை களை எடுத்துக் கூறுகிறார்.

“ஏன்புது தெய்வத்தைத்தேடி வந்திருக்கிறாய்...? உன் அருகில் நிற்கிறானே கண்ணன்.... அவன் தெய்வமாகத் தெரியவில்லையா? அவன் பெருமையை சொல்கிறேன் கேள்...

பத்தாவது நாள் யுத்தம். நான் கௌரவ சேனைக்குத் தலைமை தாங்கிப் புறப்படுகிறேன். அப்போது துரியோதனன் வந்தான்.

“ஓய் பாட்டனாரே! உம்மைப் பற்றி எல்லோரும் பெரிய வீரன், மகா பலசாலி என்றெல்லாம் சொல்கிறார்களே... உம்மைக் கண்டு பரசுராமரே நடுங்குவார் என்கிறார்களே. ஆனால் உம்மால் பாண்டவர்களை ஒன்றும் செய்யமுடியவில்லையே.. நீர் கபடம் செய்கிறீர். எனக்குத் துரோகம் செய்கிறீர். இந்தப் பத்து நாள் யுத்தத்தில் நம் சேனைகளுக்குக் கடும் சேதம். இத்தனைக்கும் நீர் சேனாபதி. நாம் தோற்பதற்குக் காரணம் நீர்தான். உமக்கு பாண்டவர்கள் மேல் பரிவு இருக்கிறது. உம் பிரிய பேரன்மார் பாண்டவர்களைப் பார்த்த மாத்திரத்தில் ஒன்றும் செய்யாமல் வந்து விடுகிறீர்... உமக்கு இருப்பது பாண்டவர் மீதான பரிவு’’ என்று சொல்லி என்னைத் திட்டினான்.

“அஸ்தினாபுரத்தைக் காப்பேன்’’ என்று என் தந்தைக்கு செய்து கொடுத்த சத்தியத்தைக் காத்து வரும் எனக்கு இப்படி ஒரு அவச்சொல் கேட்க சகிக்கவில்லை. அவன் சொன்ன வார்த்தைகளைச் சகிக்க மாட்டாமல் அவனிடம் ஒரு சபதம் செய்தேன். “இன்றைக்கு பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் நடக்கும் யுத்தத்தில் என்ன நடக்கிறது பார்.. நான் செய்யும் கோர யுத்தம் தாங்காமல், இந்தப் போரில் ஆயுதம் எடுக்கமாட்டேன் என்று சபதம் செய்த கிருஷ்ணனையே ஆயுதம் ஏந்தச் செய்கிறேன் பார்’ என்று அவனிடம் சபதம் செய்தேன்.

அப்படியே நான் போர்க்களத்துக்கு வந்த வேகத்தில், துரியோதனன் நாவினால் என்னைச் சுட்ட வடு ஏற்படுத்திய கோபம்... வெறியோடு யுத்தம் செய்தேன். எதிரில் வந்தான் கண்ணன் அர்ஜுனனுடன்! அவன் மீது அம்பை எய்தேன்.









அவனை மட்டுமா அடித்தேன். விஷ்ணு பக்தனான நான் கண்ணனுக்கு சந்தனாபிஷேகம் செய்து திருப்பாதங்களைக் கழுவ வேண்டாமா..? அந்தப் போர்க்களத்தில் என்ன செய்தேன்...?

கண்ணன் மீது அம்பு பட்டு அவன் உடலிலிருந்து ஓடும் செங்குருதியால் அவன் பாதங்களை நனைத்து அபிஷேகம் அல்லவா செய்தேன்.

கிருஷ்ணனோ சிரித்துக் கொண்டிருந்தான்... ஆனால் நான் அடித்த அடியில் காண்டீபம் நழுவி மூர்ச்சையாகி விழுந்தான் அர்ஜுனன்.

பார்த்தான் கிருஷ்ணன். கையில் சக்ராயுத பாணியாக தேரிலிருந்து குதித்தான். அப்போது அவன் போட்டிருந்த மேல் வஸ்திரம் நழுவிக் கீழே விழுகிறது. அதைத் தாண்டிக் கொண்டு அவன் வருகிறான்.

நானோ, “அப்பா கிருஷ்ணா... அந்தப் பாவி துரியோதனன் போட்ட உப்பு போகட்டும். எனக்கு உன் சக்கரத்தால் மோட்சம் கிடைக்கட்டும்’’ என்று சொல்லிக்கொண்டு எதிர்கொண்டேன்.

அப்போது மயக்கம் தெளிந்து எழுந்தான் பார்த்தன். கையில் சக்கரத்தோடு என்னை நோக்கி ஓடி வந்த கண்ணனைக் கண்டான்.

உடனே கண்ணனின் கால்களைப் பிடித்துக் கொண்டு, “ஹே கிருஷ்ணா இந்தப் போரில் ஆயுதமெடுக்க மாட்டேன் என்று சத்தியம் செய்த நீ உன் சத்தியத்தை மீறலாமா?’’ எனக் கேட்டான்.

கண்ணன் சொன்னான்.... “என் சத்தியம் கிடக்கட்டும்... நீ செய்த சத்தியத்தை நான் காக்க வேண்டாமா? கிருஷ்ணன் பாதத்தில் நான் தஞ்சம்... அவன் என்னைக் காப்பான் என்றாயே... இப்போது இந்தக் கிழவன் உன் கதையை முடித்து விடுவான் போலிருக்கிறதே... நீ செய்த சத்தியத்தைக் காக்க என் சத்தியம் போனால் பரவாயில்லை...’’ என்று சொன்னான்.

அவர்கள் இருவர் பேசுவதும் என் காதில் விழுகிறது. உண்மையில் தர்மா... கிருஷ்ணன் தன் சத்தியத்தை மீறுவதற்காகவும் ஆயுதம் ஏந்தவில்லை. அர்ஜுனன் சத்தியத்தைக் காப்பதற்காகவும் ஆயுதம் ஏந்தவில்லை. காலையில் துரியோதனனிடம் நான் செய்தேனல்லவா ஒரு சத்தியம்... இன்று போர்க்களத்தில் கிருஷ்ணனையே ஆயுதம் எடுக்க வைக்கவில்லை என்றால் நான் கங்கையின் புத்திரன் இல்லை என்று. என்னுடைய அந்த சத்தியத்தைக் காப்பதற்காக, எனக்காக என் பிரபு ஆயுதம் எடுத்தான்..’’ என்றார் பீஷ்மர் கண்களில் நீர் தளும்ப...



# பகையை நீக்கி, பித்ரு தோஷத்தை குறைத்து, கிரக தோஷத்திலிருந்து காப்பாற்றும்

# பைரவ வழிபாடு

தீவினைகளை அகற்றி நல்வினையாகத்தரும் தெய்வங்களில் மிக முக்கியமாக கருதப்படுபவர் பைரவர், பைரவர் சிவ அம்சமாவார். இந்து சமயத்தில் பைரவர் வழிபாடு முக்கியமானது.

பிரம்மாவின் ஆணவத்தை அடக்குவதற்காக சிவனின் தத்புருஷ முகத்தில் இருந்து ஜோதியாக வெளிப்பட்டவர் பைரவர்.

காவல் தெய்வமான இவரும், சிவனைப் போல் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் செய்து வருகிறார். திரிசூல பாணியான இவர், நீலநிற மேனியுடன், நிர்வாண கோலத்தில் நாய் வாகனத்துடன் காட்சி தருவார். சிவாலயங்களில் வடகிழக்கு திசையில் இவருக்கு தனி சன்னிதி உண்டு. காலையில் ஆலயம் திறந்தவுடனும், இரவு அர்த்த சாமபூஜை முடியும் போதும் இவருக்கு விசேஷ பூஜைகள் நடைபெறும்.

ஆதிபைரவரிடம் இருந்துதான் முதலில் அசிதாங்க பைரவர், உருபைரவர், சண்ட பைரவர், குரோதன பைரவர், உன்மத்த பைரவர், கால பைரவர், பீஷண பைரவர், சம்ஹார பைரவர் எனும் அஷ்ட பைரவர்கள் தோன்றினர்.

பின்னர் இந்த எட்டு பைரவர் திருமேனி ஒவ்வொன்றிலிருந்தும் எட்டு எட்டாக ஒவ்வொரு காரணத்திற்கேற்ப 64 திருக்கோலங்களில் பைரவர்கள் வாகனத்துடனும், வாகனம் இல்லாமலும் நம் நாட்டில் உள்ள எல்லாக் கோவில்களிலும் எழுந்தருளி அருள் பாலிக்கிறார்கள். ஆக, நம் நாட்டில் உள்ள எல்லா ஆலயங்களிலும் எழுந்தருளி அருள்பாலிக்கும் எல்லா பைரவ மூர்த்திகளுக்கும் ஸ்ரீயோக பைரவர்தான் மூலமூர்த்தி ஆவார்.

பைரவர் என்றால் பயத்தை நீக்குபவர். தன்னை நாடி வரும் பக்தர்களின் பாவத்தை போக்குபவர் என்று பொருள். தினமும் வேதனையை அனுபவிப்பவர்கள், தாங்க முடியாத அளவிற்கு எதிரிகளால் துன்பம் அடைபவர்கள், அவற்றில் இருந்து விடுபட பைரவரை வழிபடலாம். விபத்து, துர்மரணம் இவற்றில் இருந்து காப்பவரும் பைரவரே. அந்த அளவிற்கு பைரவர் முக்கியத்துவம் வாய்ந்தவர்.

பைரவரை தொடர்ந்து வணங்கினால் தீவினைகள் அழியும். எதிரிகள் தொல்லை ஒழியும். யாருக்கும் அடிபணியாத, தலை குனியாத வாழ்க்கை அமையும். குழந்தை பாக்கியம் கிடைக்கும். நவக்கிரகங்களால் ஏற்படும் துன்பம் நீங்கும். வறுமை நீங்கி செல்வச் செழிப்பு உண்டாகும். இழந்த பொருள் செல்வத்தை மீண்டும் பெறலாம். திருமணத்தடை அகலும். தடைப்பட்ட அனைத்து காரியங்களும் நிறைவேறும். பிதுர் தோஷம் விலகும்.

ஸ்ரீ பைரவருக்குப் பவுர்ணமிக்கு பின்வரும் தேய்பிறை அஷ்டமியில் பஞ்சதீபம் ஏற்றி வழிபட்டால் காலத்தினால் தீர்க்க முடியாத தொல்லைகள் நீங்கும். நல்லருள் கிட்டும், இலுப்பை எண்ணை, விளக்கு எண்ணை, தேங்காய் எண்ணை, நல்லஎண்ணை, பசு நெய் இவற்றினை தனித்தனி தீபமாக அகல் விளக்கில் ஏற்றலாம்.

ஒன்றிலிருந்து ஒன்றை ஏற்றாமல் தனித்தனி தீபமாக ஏற்றி வழிபட்டால் எண்ணிய காரியங்கள் நிறைவேறும் என்பது ஐதீகம். ஆறு தேய்பிறை அஷ்டமிகளில் பைரவரை சிவப்பு நிற அரளியால் வழிபட்டால் நல்ல மக்கள் செல்வங்களைப் பெறலாம்.

அஷ்டமி திதியில் மற்றும் பிரதி தமிழ் மாதம் எல்லாத் தேதியிலும் ஆயில்யம், சுவாதி, மிருகசீரிஷம், நட்சத்திர தினங்களிலும் பைரவரை வழிபட்டால் உத்தியோகத்தில் மதிப்பும், பதவி உயர்வும் கிட்டும். தொழிலில் லாபம் கிட்டும். சனி பிரதோஷத்தன்று பைரவருக்கு தயிர் அன்னம் படைத்து வழிபட்டால் வழக்குகளில் வெற்றி கிட்டும்.



தேய்பிறை அஷ்டமியில் பஞ்ச தீபம் ஏற்றி வழிபட்டால் காலத்தினால் தீர்க்க முடியாத தொல்லைகள் நீங்கும். நல்லருள் கிட்டும். பஞ்ச தீபம் என்பது இலுப்பை எண்ணை, விளக்குஎண்ணை, தேங்காய் எண்ணை, நல்லஎண்ணை, பசு நெய் ஆகும். இவற்றைத் தனித்தனி தீபமாக ஏற்ற வேண்டும். அகல் விளக்கில் ஏற்றலாம்.

ஸ்ரீ பைரவருக்கு இந்த பஞ்ச தீபம் ஏற்றி வழிபட்டால் எண்ணிய செயல்கள் நிறைவேறும் என்பது ஐதீகம். தை மாதம் முதல் செவ்வாய்க்கிழமை தொடங்கி ஒவ்வொரு செவ்வாய் தோறும் பைரவரை வணங்கி கால பைரவ அஷ்டகம் படித்து வந்தால் எதிரிகள் அழிந்து, கடன்கள் தீர்ந்து, யம பயம் மட்டுமில்லாது எவர் பயமுமின்றி நீண்டநாள் வாழலாம்.

வாழ்க்கையில் தரித்திரம் வராமல் காத்து செல்வச் செழிப்பை வழங்குபவர். ஸ்வர்ணாகர்ஷண பைரவரை வடக்கு திசை நோக்கி அமர்ந்து வழிபடுவது சிறப்பு. திருவாதிரை நட்சத்திரத்தில் வழிபடுவதால் சிவனது அருள், செல்வம் கிட்டும், தாமரை மலர் மாலை, வில்வ இலை மாலை போடுவது சிறந்தது.

தேய்பிறை அஷ்டமி திதிகளில் செவ்வாடை அணிவித்து, நெய் விளக்கு ஏற்றி, வடைமாலை சாற்றி, செந்நிற மலர்களைக் கொண்டு அர்ச்சித்து, வெள்ளைப் பூசணியில் நெய் தீபம் ஏற்றிவர நல்ல பலன் கிடைக்கும்.

ஞாயிற்றுக்கிழமை மாலை ராகு கால நேரத்தில் பைரவருக்கு 11 நெய் தீபம் ஏற்றி விபூதி அல்லது ருத்திராபிஷேகம் செய்து, வடைமாலை சாற்றி சகஸ்ரநாம அர்ச்சனை செய்து வழிபட்டால் திருமணம் ஆகாதவர்களுக்கு விரைவில் திருமணம் கைகூடும்.

இவரை வழிபாடு செய்வதால் வறுமை, பகைவர்களின் தொல்லைகள், பயம் நீங்கி அவர் அருளால் அஷ்ட ஐஸ்வர்யங்களும், தன லாபமும், வியாபார முன்னேற்றம், பணியாற்றும் இடத்தில் தொல்லைகள் நீங்கி மனத்தில் மகிழ்ச்சியை பெறலாம்.

நம்பிக்கையுடன், பக்தியுடன் சொர்ணாகர்ஷண பைரவர் படத்தை வீட்டில் வைத்து தினந்தோறும் தூப தீபம் காட்டி வழிபட்டு வருவதுடன் தேய்பிறை அஷ்டமி

திதியில் திருவிளக்கு பூஜை செய்து பலவிதமான மலர்களைக் கொண்டு பூஜித்து வணங்கி வந்தால் வீட்டில் செல்வச் செழிப்பு ஏற்படும். வியாபாரிகள் கல்லாப் பெட்டியில் சொர்ண ஆகர்ஷண பைரவர், பைரவி சிலை அல்லது படத்தை வைத்து பூஜித்து வர கடையில் வியாபாரம் செழித்து செல்வம் பெருகி வளம் பெறுவார்கள்.

தினமும் பைரவர் காயத்ரியையும், பைரவி காயத்ரியையும் ஓதி வந்தால் விரைவில் செல்வம் பெருகும். வெல்லம் கலந்த பாயசம், உளுந்து, வடை, பால், தேன், பழம், வில்வ இலைகளால் மூல மந்திரம் சொல்லி அர்ச்சனை செய்ய தொழில் விருத்தியாகும்.

ஸ்வர்ணாகர்ஷண பைரவ அஷ்டகம் தனச்செழிப் பைத் தரும் வெள்ளிக்கிழமை, திங்கட்கிழமை இரண்டு நாட்களிலும் சந்தியா காலங்களில் படிப்பவர்கள் வாழ்க்கையில் வெற்றியையும், தன விருத்தியையும் அடைவார்கள்.

பவுர்ணமி அன்று இரவு எட்டு மணிக்கு தீபத்தை ஏற்றி வைத்துக் கொண்டு 18 முறை பாராயணம் செய்ய வேண்டும். இவ்விதம் ஒன்பது பவுர்ணமிகளில் பாராயணம் செய்தால் தன வரத்தை அடையலாம். நீண்ட நாட்களாக உள்ள வறுமையிலிருந்து விடுபட லாம். 9வது பவுர்ணமியன்று அவலில் பாயசம் நைவேத்தியம் செய்யலாம்.

கார்த்திகை மாதம் தேய்பிறை அஷ்டமி பைரவ ருக்கு ஜென்ம அஷ்டமி ஆகும். இந்த தினத்தில் அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு மாதமும் தேய்பிறை அஷ்டமி அன்று பைரவர் வழிபாடு நடத்தப்படுகிறது. ஒருவரின் உண்மையான கோரிக்கைகளை நம்பிக்கையுடன் பைரவரிடம் வேண்டும்போது 30 தினங்களுக்குள் நிறைவேறு கிறது.

சித்திரை பரணி, ஐப்பசி பரணி போன்ற மாதங்களில் வரக்கூடிய பரணி நட்சத்திரம் கால பைரவருக்கு விசேஷ நாட்கள் ஆகும். ஏனெனில் பரணி நட்சத்திரத்தில்தான் பைரவர் அவதரித்தார். எனவே பரணி நட்சத்திரக்காரர்கள் பைரவரை வழிபட்டால் புண்ணியமும், பலனும் அதிகம் கிடைக்கும்.

தை மாதம் செவ்வாய்க் கிழமைகளில் பைர வரை வழிபட்டு விரதம் இருப்பது மிகுந்த பலன் களை கொடுக்கும். எல்லா அஷ்டமிகளிலும் பைரவர் விரதம் இருக்கலாம். ஆனால் செவ் வாய்க் கிழமைகளில் அஷ்டமி இணைந்து வந் தால் அதைவிடச் சிறப்பான நாள் ஏதுமில்லை. குறைந்தபட்சம் 21 அஷ்டமிகள் தொடர்ந்து விரதம் இருக்க வேண்டும்.

# பைரவரின் உடல் உறுப்புகளுக்குள் அடங்கிவிடும் கிரகங்கள்




பைரவரை ஜோதிட நூல்கள் காலமே உருவாய் கொண்ட காலபுருஷ னாக கூறுகின்றன. பன்னிரெண்டு ராசிகளும் அவரது உருவின் பகுதிகளாகின்றன.

| | |
|---|---|
| மேஷம் | – சிரசு, |
| ரிஷபம் | – வாய், |
| மிதுனம் | – இரு கரங்கள், |
| கடகம் | – மார்பு, |
| சிம்மம் | – வயிறு, |
| கன்னி | – இடை, |
| விருச்சிகம் | – லிங்கம், |
| தனுசு | – தொடைகள், |
| மகரம் | – முழந்தாள், |
| கும்பம் | – கால்களின் கீழ்பகுதி, |
| மீனம் | – அடித்தளங்கள். |

பிரபஞ்சத்தில் சகல ஜீவ ராசி களும் வான மண்டலத்தில் உள்ள நட்சத்திரங்களும், சூரியன், சந்தி ரன் சனி, ராகு கேது ஆகிய நவக் கிரகங்களும் காலச்சக்கரத்தின் ஆளுகைக்கு உட்பட்டதே! காலச் சக்கரத்தினை இயக்கும் பரம்பொருள் பைரவரே!

கிரகங்கள் எல்லாம் நம்மை ஆட்டிப் படைக்கின்றன. ஆனால், அந்த கிரகங்களை எல்லாம் ஸ்ரீ யோக பைரவர் ஆட்டிப் படைத்து ஆட்சி செய்கிறார். பைரவர் அரசர் என்றால், அவர் இட்ட கட்டளைகளை நிறைவேற்றும் சேவகர்களே கிரகங் கள்.

பைரவரின் கட்டளைப்படியே காலச்சக்கரம் சுழல்கிறது. அவர் கட்டளைப்படியே எல்லா கிரகங் களும் செயல்படுகின்றன.

பைரவரைச் சரணடைந்து நெஞ்சம் உருக வழிபட்டால் காலத்தின் கட்டுப் பாட்டையும் மீறி கிரக தோஷங்களை அகற்றி நன்மைகள் பல புரிவார் என்கிறது சாஸ்திரம்.

அதிகாலையில் நீராடி, பைரவரை மனதில் நினைத்து வணங்க வேண்டும். பகலில் ஏதாவது ஒரு பொழுது மட்டும் எளிய உணவு சாப்பிடலாம். இரவில் கண்டிப்பாக சாப்பிடக்கூடாது. அன்று மாலை பைரவருக்கு வடை மாலை சாற்றி வழிபட வேண்டும். வசதி குறைந்தவர்கள் ஒரு தீபம் மட்டும் ஏற்றினால் போதும்.

மறுநாள் நவமியன்று காலை மீண்டும் கோவிலுக்கு சென்று விநாயகர், சிவன், அம்பாள், பைரவரை வணங்கி, ஏழைகளுக்கு அன்னதானம் அளிக்க வேண்டும். சிறிதளவு சர்க்கரைப் பொங்கல் செய்து குழந்தைகளுக்கு கொடுத்தால் நல்லது. பைரவ விரதத்தின் நோக்கமே கேடுகளை அழிப்பதுதான்.

## ஸ்ரீ மஹா பைரவரை வணங்குதலால் ஏற்படும் பலன்கள்

1. தலை குனியா வாழ்க்கை.
2. சுப மங்களம் ஊர்ஜிதம்.
3. தீய வினைகள் முற்றிலும் அழிவு.
4. பிறவியின் பலனை முழுவதுமாக உணர்தல்.
5. தடையில்லாமல் சௌகரியம் ஏற்படுதல்.
6. கர்வம் இல்லாமல் சமயோஜித பாக்கியம்.
7. கிரகன தோஷங்களின் பாதிப்பு விலகுதல்.
8. வாழ்ந்த ஜனனங்களின் பிறவியை புனிதப்படுத்துதல்.
9. இறைவனை எளிதாக உணர்தல்.
10. உலக உயிரினங்களின் காவல் தெய்வம் என்பதை உலகுக்கு உணர்த்தி விடுதல்.

இதுபோன்ற பலன்களை நாம் ஸ்ரீ மஹா பைரவர் கடவுளை வணங்கி வரும்போது அனு பவ உணர்வுகளால் நிச்சய பலனாக பெற முடி யும் என்பதில் சந்தேகம் இல்லாமல் ஊர்ஜிதம் செய்யலாம்.

ஒரு வரியில் ஸ்ரீ பைரவர் காயத்திரி மந்திரம் 108 முறை சொல்வது நல்லது

**ஓம் ஸ்ரீம் க்லிம் ஸ்ரீ கால பைரவாய நமஹ!**

அனைத்து மக்களும் இதை எளிதாக சொல்ல லாம், பூர்ணமான பலன் கிடைக்கும்.

## விரத நாட்கள்:

கார்த்திகை நட்சத்திர திதி நாளிலும்,பௌர்ணமி உதய நாளிலும்,அமாவாசை கால நிலைகளிலும்,அஷ்டமி பிறை நாளிலும், ஸ்ரீ மஹா பைரவர் கடவுளை நினைத்து விரத பூஜை மேற்கொள்ள உத்தமம் செய்யலாம்.

## பைரவரை ஏன் வழிபட வேண்டும்?

துன்பங்களும், துயரங்களும் வாழ்க்கையில் தொடர்கதையாகி போனவர்களுக்கு நம்பிக்கை ஊட்டுவதாக பைரவர் வழிபாடு கூறப்படுகிறது. கடவுள் வழிபாடு செய்து விட்டு அதற்கான பலன்களை எதிர்பார்க்கும் பக்தர்களுக்கு உடனடி நிவாரணம் தரும் கடவுளாக பைரவர் விளங்குகின்றார்.

நவக்கிரகங்களின் வக்கிரத்தால் பலர் வாழ்க்கையில் மிகுந்த துன்பத்தை அடைகிறார்கள். இந்த துன்பங்களிலிருந்து மீள என்ன வழி என்று கேட்டால் பைரவர் பூஜை செய்யுங்கள் என்றுதான் சொல்ல வேண்டும். பைரவர் பூஜை செய்வதனால் கடுமையான தோஷங்களும் நீங்கும் என்று பைரவர் வழிபாட்டில் பரிகாரங்கள் சொல்லப்பட்டுள்ளன.

நமது ஜாதகத்தில் எந்த கிரகத்தால் தோஷம் உள்ளதோ, அதற்குரிய பைரவரை வழிபாட்டு நலம் பெறுதல் வேண்டும். நவக்கிரகங்களின் தொல்லைகளிலிருந்து மீள ஒன்பது விதமான பைரவ வழிபாடுகள் பரிகாரங்களாக ஜோதிட நூல்களில் கூறப்பட்டுள்ளன.

## பிடித்த உணவுப் பொருட்கள்

பைரவப் பெருமானுக்கு சர்க்கரைப் பொங்கல், தயிர் சாதம், தேன், செவ்வாழை, வெல்லப் பாயாசம், அவல் பாயாசம் நெய்யில் போட்டு எடுக்கப்பட்ட உளுந்து வடை, சம்பா அரிசி சாதம், பால் மற்றும் பல பழவகைகள் வைத்து வழிபாடு செய்வது மிகவும் உத்தமம்.

## பைரவரை வழிபாடு செய்ய சிறந்த நாள்

பொங்கல் திருநாள், மகர சங்காராந்தி, ரதசப்தமி, உத்தராயன புண்ணியகாலத் துவக்கம் என எண்ணற்ற வைபவங்களுடன் திகழும் தை மாதத்துக்கு இன்னொரு விசேஷமும் உண்டு. ஆமாம் காவல் தெய்வம் பைரவர் வழிபாட்டுக்கும் உகந்த மாதம். தை மாதம் முதல் செவ்வாயில் துவங்கி, அனைத்து செவ்வாய்க் கிழமைகளிலும் பைரவரை வழிபடுவது சிறப்பு. அதிலும் பைரவரின் மகாத்மியத்தை அறிந்து வழிபடுவதால், பலன்கள் பன்மடங்கு அதிகம் கிடைக்கும். சிவாலயங்களில்,

விநாயகர் தரிசனத்துடன் ஆரம்பிக்கும் வழிபாடு, பைரவ தரிசனத்துடன் நிறைவடையும்.

பைரவருக்கு மிகவும் உகந்த நாள் அஷ்டமி என கருதப்படுகிறது. பொதுவாக, மக்கள் அஷ்டமி அன்று எந்த நல்லகாரியமும் செய்ய மாட்டார்கள். அதன் உண்மைக்காரணம் வேறு, இறையாணைப்படி, அனைத்து ஜீவராசிகளுக்கும் எல்லா ஐஸ்வர்யங்களையும் அள்ளித்தரும் பணியினை நிறைவேற்றுபவர்கள் அஷ்ட லட்சுமிகள். சொர்ண பைரவரிடம், சக்திகளைப் பெற்று தாங்கள் பெற்ற அதனை பக்தர்களுக்கு விநியோகம் செய்துவருகின்றனர். தாங்கள் பெற்ற சக்தி குறைய குறைய, ஒவ்வொரு அஷ்டமியிலும் பைரவரை வழிபாடு செய்து தங்கள் சக்தியை பெருக்கி கொள்ளுகின்றார்கள். அஷ்டமி அன்று, அஷ்ட லட்சுமிகளே பைரவ வழிபாட்டில் ஈடுபடுவதால், அவர்களால் அன்று நடைபெறும் நற்காரியங்களில் ஈடுபட முடியாது.

ஆகவே, அஷ்ட லட்சுமிகளே வழிபடும் அந்த அஷ்டமி நன்னாளில், நாம் நேரடியாக ஸ்ரீபைரவரை வணங்கிவந்தால், அஷ்ட ஐஸ்வர்யங்களும் கிடைக்கும். சாதாரணமாக, நாய் வாகனம் பைரவரின் பின்புறம் வலப்பக்கம் தலை உள்ளவாறு இருக்கும். சில இடங்களில் இடப்பக்கம் தலை உள்ளவாறு இருக்கும்.

மிக அரிதாக, சில இடங்களில் மட்டுமே இருபக்கமும் நாய்வாகனங்களுடன் பைரவர் காட்சி தருகிறார். இவ்வாறு, இடப்பக்கம் மற்றும் இரு வாகனங்களுடன் உள்ள பைரவ பெருமான், மிகுந்த சக்தியுடன் விளங்குவதாக ஐதீகம். ஏவல், பில்லி சூனியம், பேய் பிசாசு முதலியவற்றின் தொல்லைகளிலிருந்து பூரண விடுதலை அடைய, வாழ்வில் வளம் பெற, திருமணத்தடைகள் நீங்கிட, பிதுர்தோஷம், சனிதோஷம், நீங்க பைரவர் வழிபாடு மிகவும் உதவும்.

பைரவரை வழிபட ஒவ்வொரு மாதமும் அஷ்டமி திதி சிறந்தது. அன்று அஷ்ட லட்சுமிகளும் பைரவரை வழிபடுவதாக ஐதீகம். அன்றைய தினம் பைரவரை வழிபட்டால் பொன், பொருள், ஐஸ்வரியம், சுகம் அனைத்தையும் அடையலாம். பைரவருக்கு சிறு துணியில் மிளகை கட்டி நல்லெண்ணெய் தீபத்தை ஏற்றி வழிபட்டால், வாழ்க்கையில் வளம் பெருகும். தேங்காய் மூடியில் நெய் நிரப்பி தீபம் ஏற்றி வழிபட்டால் ஆரோக்கிய வாழ்வு அமையும். சந்தனக்காப்பு செய்து வழிபட்டால், எந்நாளும் இன்ப நாளாக அமையும்.



www.aanmeegamalar.com

# ஸ்ரீராமஜெயம் எழுதுவது ஏன்?

சிலர் ஸ்ரீராமஜெயத்தை லட்சம் முறை, கோடி முறை என எழுதுகின்றனர். வேலை கிடைத்தல், திருமணம், வீடு கட்டுதல் போன்ற உலக இன்பங்கள் கருதி வேண்டுதல்களுக்காக இதை எழுதுகின்றனர். உலக இன்பங்கள் மட்டுமின்றி, இந்த மந்திரம் அகப்பை எனப்படும் நமக்குள்ளேயே இருக்கும் கெட்ட குணங்களையும், புறப்பகை எனப்படும் வெளியில் இருந்து நம்மைத் தாக்கும் குணங்களையும் வெல்லும் சக்தியைத் தரும்.'' "ராம'' என்ற மந்திரத்திற்கு பல பொருள்கள் உண்டு. இதை வால்மீகி முனிவர் "மரா'' என்றே முதலில் உச்சரித்தார். "மரா'' என்றாலும், "ராம'' என்றாலும்



பாவங்களைப் போக்கடிப்பது என்று பொருள். ராமனுக்குள் சீதை அடக்கம். அதனால் அவரது பெயரையே தனதாக்கிக் கொண்டாள். "ரமா'' என்று ஒரு பெயர் சீதைக்கு உண்டு. "ரமா'' என்றால் "லட்சுமி''. லட்சுமி கடாட்சத்தை வழங்குவது "ராம'' மந்திரம். ராம மந்திரம் எழுதுவோருக்கும், சொல்வோருக்கும் எங்கும் எதிலும் ஜெயம் (வெற்றி) உண்டாகும். ராமன் என்ற பெயரின் அர்த்தம், "ரா'' என்றால் "இல்லை'' "மன்'' என்றால் "தலைவன்''. இது போன்ற தலை வன் இதுவரை இல்லை'' என்பது இதன் பொருள்.








www.aanmeegamalar.com

# யோகி ராம்சுரத்குமார்

வாழ்க்கை வரலாறு சிறு தொடர்

## தொடர் 3

உணர்தல் என்ற விஷயமே கடவுள் தேடல் விஷயம். தன்னை உணர முற்படுகிறபோது இது பிரமாண்டமாக விரிவடைகிறது. எல்லா இடங்களிலும் அது நீக்கமற நிறைகிறது. அப்போது அவருக்கு, தான் என்ன செய்கிறோம் என்கிற நினைப்பு இல்லை. இந்த உலகாயத மான மரியாதைகள் அவருக்குத் தெரியவில்லை. அவர் தனக்குள் பேசியபடி தன்னையே பார்த்தபடி இருக்கிறார். தன்னை உற்றுப் பார்ப்பவருடைய அவஸ்தை மற்றவரைப் பார்க்க விடுவதில்லை. தனக்குள் உள்ள அந்த 'தான்' என்பதை அனுபவிக்கிற போது வேறு எதுவும் மனதுக்குப் புலப்படுவதில்லை. இதுவொரு கலக்கமான நேரம். கலங்கியதுதான் தெளியும். விரைவில் தெளிந்தது. மிகப் பெரிய உண்மை ஒன்று எளிதில் புலப்பட்டது. அவர் குடும்பத்தை விட்டு மறுபடியும் திருவண்ணாமலை நோக்கிப் பயணப்பட்டார்.

திருவண்ணாமலைக்கு வந்து இறங்கினார். அங்கு ஒரு புன்னை மரத்தடியில் இடையறாது இறை நாமம் சொல்லி வந்தார். அதற்குப் பிறகு அவர் குடும்பத்தை நோக்கிப் போகவே இல்லை. கட்டு அறுந்து போயிற்று; கடவுளோடு பிணைப்பு உறுதியாயிற்று.

திருவண்ணாமலை ரயில் நிலையத்தில் அலைந்து திரிந்து, வருவோர் போவோரிடம் யாசகம் கேட்டு உணவருந்தி ஒன்றுமில்லாத போது பட்டினி கிடந்து, வெயிலிலும் மழையிலும் நனைந்து, திருவண்ணாமலையையே வியப்புறப் பார்த்து ஞானியாக வாழ்ந்து வந்தார் ராம் சுரத்குன்வர். அவருடைய உள்ஒளி மேலும் மேலும் பெருகி கடவுளின் அண்மை அவருக்குள் ஏற்பட்டது. கடவுள் தன்மை அவருக்குள் இறங்கியது. ராம்சுரத்குன்வர் திருவண்ணா மலையில் யோகி ராம்சுரத்குமார் என்று மாறினார்.

தங்க நாணய மயமான சிரிப்பு தன்னைத் தெரிந்த ஒருவருக்கே அப்படி ஒரு கிண்கிணியாய் சிரிக்க முடியும். புரிந்து கொண்டு சில நண்பர்கள் அவரை தினசரி தரிசித்தார்கள். ஐரோப்பியர்களும் அமெரிக்கர்களும், திருவண்ணாமலை வலம் வரும்போது அவரை யதேச்சையாக சந்தித்து அந்தக் கண்களுடைய தீட்சண்யத்தைக் கண்டு வியந்து, அவர் கால் பற்றி அவரைப் பின்தொடர்ந்தார்கள். கடவுளைப் பற்றி விவாதித்தார்கள். வாழ்க்கையைப் பற்றி யோசித்தார்கள். மேலைநாட்டினர் அதிகம் வந்ததால் அவரைப் பற்றிய விவரங்கள் உள்ளூரில் தெரிய வந்தன.

புன்னை மரத்துக்கருகே ஒரு கிணறு. அதில் இரவில் மேய்ந்து கொண்டிருந்த குதிரை விழுந்து விட்டது. மேலே ஏற பலத்த முயற்சிகள் செய்தது. அருகே போய் அதை கயிறு கட்டித் தூக்கிவிட எவராலும் இயலவில்லை. யோகி ராம்சுரத்குமார் சிறிது நேரம் காத்திருந்தார். பிறகு எல்லோரையும் விலகிப் போகச் சொன்னார். குதிரையை உற்றுப் பார்த்தார். குதிரை அவரைப் பார்த்தது. குதிரையின் உள்ளுக்குள் தன் கவனத்தை செலுத்தினார். குதிரையின் உடம்புக்குள் சக்தி ஏறியது. தாண்டுவதற்குண்டான உத்வேகத்தை தன் மனதின் மூலமாக குதிரையின் மனதுக்குள் செலுத்தினார். குதிரை தயாராக இருந்தது. 'ஜெய் ராம்' என்று ஒரு முறை உரக்கக் கத்தினார். குதிரை ஒரே துள்ளலில் கரையேறி ஓடிப் போயிற்று. அருகிலிருந்தவர்கள் வியந்தார்கள்.

இது எப்படி சாத்தியம்..? கேட்டார்கள். "இந்தப் பெயரைச் சொன்னால் போதும் எல்லாவற்றையும் கரையேற்றும்" என்றார். அன்று முதல் ராமநாமம் சொல்கிறவராக, ராமநாமத்தைப் பரப்புகின்றவராக அவர் அறியப்பட்டார்.

அவர் கையில் எப்போதும் வெப்பத்தை தணிக்க ஒரு விசிறி. உணவு வாங்க ஒரு கொட்டாங்கச்சி. கையிலே சிறு கோல். இவற்றை வைத்து, அவருக்கு 'விசிறி சாமியார்' என்ற பெயரும் கிடைத்தது. ஆனால், அவர் தன்னை 'யோகி ராம்சுரத்குமார்' என்று கூப்பிடுவதையே விரும்பினார். 'ஏன்?' என்று கேட்டபோது "கடவுள் உலகத்துக்கு அளித்த கொடை 'யோகி ராம்சுரத்குமார்' என்ற பெயர். இந்தப் பெயரை எவர் உச்சரிக்கிறாரோ, எவர் மனதார சொல்கிறாரோ, அவருக்கு என் தகப்பன், அதாவது கடவுள் உதவி செய்கிறார்" என்பார்.

இது எவ்வளவு உண்மை என்பது, பலரது அனுபவத்திலிருந்து தெரிந்தது.

கணவன் மனைவிக்குள் சண்டை! மனைவியைக் கண்டபடி கணவன் ஏச, மனைவி 'உங்களோடு வாழ்வதற்குப் பதிலாக செத்துப் போகலாம்' என்றாள்! 'ரொம்ப நல்லது. செத்துப் போ. நானே உனக்கு விஷம் கொடுக்கிறேன்' என்று, ஒரு குப்பி நிறைய விஷம் கொடுத்தான் கணவன். அந்த விஷத்தை 'யோகி ராம்சுரத்குமார்', 'யோகி ராம்சுரத்குமார்', 'யோகி ராம்சுரத்குமார்' என்று மூன்று முறை சொல்லி, மட மடவென்று அவள் குடித்தாள்.

என்னாயிற்று..? எதுவும் ஆகவில்லை. விஷம் வேலை செய்யவில்லை. ஒரு வாரம் கழித்து யோகியிடம் வந்தாள் அந்தப் பெண்மணி "பகவான் உங்கள் பெயரைச் சொல்லி விஷம் குடித்தேன். வேலை செய்யவில்லை. மாறாக, என் கணவர் தன் மீது கொலைப் பழி விழுந்து விடுமோ என்று பயந்தார். நான் உங்கள் பெயரைச் சொல்லி விஷம் குடித்ததும், விஷம் வேலை செய்யாததும் கண்டு திகைத்து மன்னிப்பு கேட்டார். அவரும் வந்திருக்கிறார் உங்களுடைய பக்தராக!" என்றாள். அந்தக் குடும்பம் அதற்குப் பிறகு வெகு சௌக்கியமாக வாழ்ந்தது.



பக்தர்கள் சேர்ந்து திருவண்ணாமலை சந்நிதித் தெருவில் யோகிக்கு ஒரு வீடு வாங்கிக் கொடுத்தார்கள். திருவண்ணாமலை சுற்றியுள்ள வியாபாரிகள் அவரை நேசித்தார்கள். இரண்டு பழம் அவருக்குக் கொடுத்தால் போதும் வாங்கிய பழம் எல்லாம் விற்றுப் போகும். அவருக்கு இரண்டு பன்னும், ஒரு கப் டீயும் கொடுத்தால் போதும் அங்கே வியாபாரம் அமோகமாக நடக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. அவர் கிரிவலம் வரும் போது, 'வந்தே மாதரம்' என்றும், 'பாரத் மாதா கி ஜேய்' என்றும், 'ராம ராம ராம' என்றும், 'ஓம் ஸ்ரீராம், ஜெய் ராம், ஜெய் ஜெய் ராம்' என்றும் முழக்கங்கள் செய்து கொண்டிருப்பார்.

ஒரு நண்பர், திருப்பதிக்குப் போகும் வழியில் திருவண்ணாமலை திரும்பி, 'யோகி ராம்சுரத்குமாரை தரிசித்துவிட்டுப் போகலாம்' என்று வந்தார். தான் திருப்பதிக்குப் போகின்ற விஷயத்தை அவரிடம் சொன்னார். 'திருப்பதிக்குப் போக வேண்டுமா..? இங்கேயே இருக்கலாமே' என்று பகவான் சொல்ல, அவர் மறுத்து, ஏற்பாடுகள் செய்து விட்டதாகவும், போயே ஆக வேண்டும் என்றும் விளக்கினார். பகவான் 'சரி'யென்று சொல்லி, "வேங்கடாசலபதியைப் பார்க்கிறபோது, 'இந்தப் பிச்சைக்காரன் யார்' என்பதைக் கேளுங்கள்" என்று சொல்லி அனுப்பினார். அந்த அன்பரும், திருமலைக்குப் போனார். பெருமாளை தரிசித்ததும், யோகி ராம்சுரத்குமார் கேட்டது ஞாபகம் வந்தது.

"பெருமாளே திருவண்ணாமலையில் இருக்கும் யோகி ராம்சுரத்குமார் யார்?" என்று உரக்க வினவினார்.

"நேனே" என்று கருவறையிலிருந்து பதில் வந்தது. மறுபடியும் கேட்க, மறுபடியும் அதே பதில். திருவண்ணாமலைக்கு வந்து, பகவானிடம் இந்த விஷயத்தைச் சொல்ல, பகவான் தங்க நாணயங்கள் இறைத்தது போல உரக்கச் சிரித்தார். கடவுளும், எல்லாம் கடந்த ஞானியும் ஒன்று என்பது தெளிவாகப் புரிந்தது. யோகி ராம்சுரத்குமார் 20 பிப்ரவரி 2001ல் முக்தி அடைந்தார். ஆனாலும், அவர் திருவண்ணாமலையில் இருந்தபடி உலகமெங்கிலுமுள்ள பக்தர்களின் உள்ளத்தில் வீற்றிருந்தபடி இடையறாது இடையறாது நற்செயல்களைச் செய்து கொண்டிருக்கிறார். நல்லவர்களை வாழ்த்திக் கொண்டிருக்கிறார். தன்னை அண்டியவருக்கு உதவி செய்து கொண்டிருக்கிறார்.

திருவண்ணாமலை செங்கம் ரோடில் ஆஸ்ரமம் உள்ளது. 'யோகி ராம்சுரத்குமார்! யோகி ராம்சுரத்குமார்! யோகி ராம்சுரத்குமார் என்று மூன்று முறை அழைத்தால் போதும். இந்தப் பிச்சைக்காரன் நீங்கள் யாராக இருந்தாலும், எங்கிருந்தாலும், எந்தப் பிரச்னை இருந்தாலும் நிச்சயமாக வந்து உதவி செய்வான்' என்று அந்த மகான் சத்தியம் செய்திருக்கிறார். நீங்களும் மனம் ஒருமித்து அவர் பெயரைக் கூப்பிடுங்கள்; உங்களுக்கும் நல்லது நடக்கும்!

(முற்றும்)

– கௌரி பிரகாஷ், செல் 9841920503


ஆன்மிகமலர் மெயில் புக்

www.aanmeegamalar.com



‘சோறு கண்ட இடம் சொர்க்கம்’

## அன்னாபிஷேகத்தை பார்ப்பவர்களுக்கு

# சொர்க்கம் நிச்சயம்

‘அன்னம் பரபிரம்ம சொரூபம்’ என்று சொல்வது மரபு. அதாவது, அன்னம் வேறு; ஆண்டவன் வேறல்ல. இரண்டும் ஒன்று தான் இதையே நாட்டுப்புறங்களில் ‘சோத்துக்குள்ளே இருக்கிறார் சொக்கநாதர்’ என்றும் குறிப்பிடுவர்.

சிவபெருமானுக்கு, ஐப்பசிமாதம் பவுர்ணமியன்று அன்னத்தால் அபிஷேகம் செய்கிறார்கள். தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோயிலிலுள்ள பெரிய லிங்கத்திற்கு அன்னாபிஷேகம் நடப்பதைக் காண ஏராளமான பக்தர்கள் வருகிறார்கள்.

அன்னம் இட்ட கை சின்னம் கெட்டுப் போகாது. ஒருவர் செய்த அன்னதான புண்ணிய பலன் பல பிறவிகளுக்கும் தொடரும் என்று தர்ம சாஸ்திரங்கள் கூறுகின்றன. அன்னம் அரியிலிருந்து தயாராகிறது.

‘அரிசி’ என்ற சொல்லில் இருவித மந்திரங்கள் சேர்ந்துள்ளன.

‘அரி’ என்பதை விஷ்ணு என்றும், சிங்கம் என்றும் கூறலாம். பிரகலாதனைக் காப்பதற்காக பெருமாள் எடுத்த அவசரத்திருக்கோலம் சிங்க முகத்துடன் கூடிய நரசிம்ம அவதாரம்.

‘சி’என்பது சிவ பெருமானைக் குறிக்கும். மகான்களுக்கு மட்டும் ‘சி’ என்ற மந்திரம் சொல்லி சிவனை வழிபட உரிமை இருக்கிறது.

‘சோறு கண்ட இடம் சொர்க்கம்’ என்று சாப்பாட்டு ராமன்களுக்கு உதாரணம் காட்டி சொல்வார்கள். உண்மையில், சோரில் அபிஷேகம் நடக்கும் சிவலிங்கத்தை தரிசிப்பவர்களுக்கு சொர்க்கம் கிடைக்கும் என்பதையே இப்படி குறிப்பிட்டனர்.





மற்றவர்களும் பயன்பெற

அறிமுகப் படுத்துங்கள்....

ஆன்மீக மலர் மெயில் புத்தகத்தில் இதுவரை 9,000க்கும் மேற்பட்ட அன்பர்கள் தங்களது மெயில் முகவரியை பதிவு செய்துள்ளனர். பதிவு செய்த அனைவரின் இமெயில் முகவரிக்கு மாதம் இருமுறை நமது இதழ் இலவசமாக அனுப்பி வைக்கப்படும். இந்த சேவையைப் பற்றி அறியாத ஆன்மீக அன்பர்களும் பயன் பெற, நமது வாசகர்கள் உதவ வேண்டும். அவர்களது இ-மெயில் முகவரியையும் பதிவு செய்ய உதவுங்கள். பதிவு செய்த அன்பர்கள் மீண்டும் பதிவு செய்ய வேண்டியதில்லை.

தெரியாதவர்களுக்கு நமது சேவையை தெரியப்படுத்துங்கள்.

உங்கள் மெயில் முகவரியை பதிவு செய்ய

whatsapp: 7299992699 / 9841807572

aanmeegamalar@gmail.com



# மரண பயத்தைப் போக்கும் கிரியா யோக விஞ்ஞானம்

10 பாகம்

**கிரியா யோகத்தைப் பற்றிய சில தகவல்களை இங்கே கூற விரும்புகிறேன்.**

மிகவும்புனிதமானஇரகசியத்திலும்இரகசியமான கிரியா யோகம் மிகவும் புராதனமானது. இந்த யோகம் ஒரு சுவாசப் பயிற்சி (பிராணாயாமம்) ஆகும். இந்த யோகம் மனித ஆத்மாவை இறைவனிடத்தில் விரைந்து அழைத்துச் செல்லக்கூடிய ஒரு சிறப்பு விமானமாகின்றது. இதற்கு மேலான அல்லது இதற்கு நிகரான வேறு எந்த யோகமும் கிடையாது. ஒவ்வொரு மனித ஆத்மாவும் இறைவனை அடைய வேண்டும். அதனால் ஒவ்வொருவருடைய முதல் குறிக்கோளும் அதுவாகத்தான் இருக்க வேண்டும். அந்தக் குறிக்கோளை இந்த யோகம் நிறைவேற்றும். இதற்கு "இராஜ வித்யா யோக" மென்றும் "இராஜ குஹ்ய யோக" மென்னும் பெயர்கள் உள்ளன. மிகவும் உன்னதமான அனைத்து யோகங்களையும் விட சிறப்பான யோக மாகையால் இதனை "இராஜ விதயா" யோகம் என்று கூறப்படுகிறது. இரகசியத்திலும் மிகவும் இரகசியமான யோகமாகையால் இதனை "இராஜ குஹ்ய யோகம்" என்றும் கூறப்படுகிறது. இது பிரம்ம வித்தையாகும். இந்த யோகம் ஆத்மபிரம்ம ஐக்கியத்தை ஏற்படுத்துகிறது. இந்த யோகத்தை நன்றாக புரிந்துகொண்டு செய்கின்ற ஒருவரின் முற்பிறவிகளில் ஏற்பட்டுள்ள கர்மவினைகளையும் முழுமையாகத் தீர்த்துவிடுகிறது. கர்மா இருந்தால் இறைவனை அடைய இயலாது. பிரம்மம் எவ்வாறு தூய்மையாக இருக்கிறதோ, அவ்வாறே ஓர் ஆத்மாவும் தூய்மையானால் மட்டும்தான் ஆத்மா இறைவனை அடைய முடியும்.

அதாவது பல பிறவிகளில் செய்துள்ள தீவினைகள், சுயம் பிரகாசித்துக் கொண்டிருக்கின்ற, ஆத்மாவை பொதிந்தவண்ணம் இருக்கின்றன. அந்த அழுக்குகள் ஒளிரும் ஆத்மாவின்ஒளியை மறைக்கின்றன. அந்த அழுக்குகள் ஆத்மாவிடமிருந்து விடுபட வேண்டுமென்றால் அது 'கிரியா யோகம்' ஒன்றினால் மட்டும்தான் முடியும். பரமபாவிகள் கூட கிரியாயோகத்தை விதிமுறைகளுக்குட்பட்டு அனுஷ்டித்தால் பாவமெல்லாம் கிரியாயோக நெருப்பில் எரிந்துவிடும். எந்த ஒரு மனிதனின் கர்மா கிரியாயோக நெருப்பில் சாம்பலாகி விடுகிறதோ அந்த மனிதனின் ஆத்மா இறைவனை அடைகிறது. பகவான் கிருஷ்ணன் மகாபாரதப் போரின்போது பகவத்கீதையை அர்ஜுனனுக்கு உபதேசித்தபொழுது இந்தப் புனிதமான யோகத்தையும் உபதேசித்தார்.

இந்த கிரியா யோகத்தை எப்படிப்பட்டவர்களுக்கு உபதேசிக்க வேண்டும் என்பது பற்றி பகவத்கீதையில் பகவான் கிருஷ்ணன் அருளியதாவது: "அர்ஜுனா! இந்த கிரியாயோகம் மிகவும் இரகசியமானது. மனம், வாக்கு, செயல் இவற்றால் செய்யும் எல்லா கர்மங்களையும் எனக்கு அர்ப்பணம் செய்தவாறு என்னிடம் சரணடைந்தவனும், பொறாமை போன்ற தீய குணங்களின்றி பிற உயிர்களிடத்தில் கருணை காட்டி ஆதரவளிக்கும் தயாலு குணமுடைய உன்னைப் போன்றவர்களுக்கு உபதேசித்தால் அவர்கள் பயனடைவர். மேலே கூறிய நல்ல குணங்களை உடையவன் நீ என்பதால் தான் நான் உனக்கு மிகவும் சிரேஷ்டமான இந்த யோகத்தை உபதேசிக்கின்றேன். சம்சாரக்கடலில் மூழ்கித்தவிக்கின்ற ஆத்மாக்கள் அனைவருக்கும் அதிலிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டுமென்ற ஆசை உண்டு. ஆனால் புண்ணியாத்மாக்களான அபூர்வம் சிலபேர் மட்டும்தான் கிடைக்கப்பெறுவர். அவ்வாறு கிரியா உபதேசம் கிடைக்கப்பெற்று, அதைப் பயிற்சி செய்து, முக்தி அடைந்த குருதேவர் மேலே கூறியது போன்றுள்ள புண்ணியாத்மாக்கள் பிறகு சம்சாரக்கடலில் மூழ்கித் தவிக்கவேண்டிய அவசியமில்லை. அப்படிப்பட்ட இரகசியத்திலும் இரகசியமான கிரியா யோகத்தை நான் உனக்கு உபதேசிக்கிறேன். நீ மிகவும் கவனமாக கேட்டுச் செயல்படுவாய்!" என்று கூறி கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு கிரியா உபதேசத்தை அருளினார். முதலில் நல்ல எண்ணங்களை வளர்க்கவேண்டும். நல்ல எண்ணங்கள் நல்ல செயல்களை செய்ய வைக்கும். நல்ல செயல்கள் `தீய கர்மாவை ஒழித்து விடுவது மட்டுமின்றி நல்ல வாழ்வை தரும். கர்மா ஒழிந்தபின் கிரியா மூலம் இறைவனை அறியலாம்; அவனுடன் இணையலாம்; பிறவிப் பணியிலிருந்து ஆத்மா விடுபடலாம்.

கிரியா யோகத்தைப் பற்றி குருதேவர் ஸ்ரீஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தர் கூறுகிறார்:

"மனித இரத்தத்திலுள்ள கரியத்தை அகற்றி, பிராணவாயுவின் மூலம் புத்துணர்ச்சி பெறச் செய்யும். மனஉடல் நூல் அடிப்படையிலான ஓர் எளிய முறையாகும். இந்த அதிகப்படியான பிராணவாயுவின் அணுக்கள் உயிரோட்டமாக உருமாற்றப்பட்டு மூளை மற்றும் முதுகுத்தண்டின் மையங்களையும் புத்துணர்ச்சி பெறச் செய்கின்றன. அசுத்த இரத்தம் பெருகுவதை நிறுத்துவதன் மூலம் யோகியானவன் திசுக்களின் அழிவை குறைக்கவோ தடுக்கவோ முடியும். நன்கு முன்னேறிய கிரியா யோகி தன் செல்களை சக்தியாக மாற்றுகிறான். கிரியா யோகத்தில் தேர்ந்தவர்களாயிருந்த இயேசு, கபீர் போன்ற பல மகான்கள் தாம் நினைத்த மாத்திரத்தில் தங்கள் உடல்களை உருவாக்கவோ மற்றும் உருக் குலைக்கவோ செய்தார்கள். கிரியா ஒரு புராதன விஞ்ஞானம். லாஹிரி மகாசயர் அவருடைய மகாகுருவான பாபாஜியிடமிருந்து அதைப்பெற்றார். பாபாஜி, இருண்ட காலங்களில் அழிக்கப்பட்டிருந்த இந்த யோகமுறையை மறுபடியும் கண்டுபிடித்து தெளிவுபடுத்தினார். அவர் இந்த முறைக்கு "கிரியா யோகம்"என்று எளிதாக மறுபெயர் கொடுத்தார்."

பாபாஜி, லாஹிரி மகாசயரிடம் கூறியதாவது: "நான் இந்த பத்தொன்பதாவது நூற்றாண்டில் உன் மூலமாக இவ்வுலகிற்கு அளிக்கும் கிரியா யோகம் பகவான் ஸ்ரீகிருஷ்ணன் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் அர்ஜுனனுக்கு அளித்த அதே விஞ்ஞான முறையின் புனருத்தாரணமாகும். பிறகு அது பதஞ்சலிக்கும் கிறிஸ்துவிற்கும் மற்றும் வேறு பல சீடர்களுக்கும் தெரிந்திருந்தது."

குருதேவர் மேலும் கூறுகிறார்: "பகவத் கீதையில் பகவான் கிருஷ்ணன் இரண்டு இடங்களில் கிரியாயோகத்தைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார். அதில் ஒரு பத்தி கூறுகிறது:

"உட்சுவாசத்தை வெளிச்சுவாசத்திற்களித்து வெளிச்சுவாசத்தை உட்சுவாசத்திற்களித்து கிரியா யோகி இருசுவாசங்களையும் சமனப்படுத்துகிறான். இவ்வாறு அவன், இதயத்திலிருந்து பிராணனை விடுவித்து உயிரோட்டத்தை தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருகிறான்." இதன் விளக்கம் என்னவென்றால் சுவாசகோசங்கள் மற்றும் இதயத்தின் இயக்கங்களை அமைதிப்படுத்துவதன் மூலம் உடலுக்கு அதிகப்படியான பிராணனை (உயிரோட்டத்தை) கொடுத்து உடலின் தேய்வை அந்த யோகி தடை செய்கிறான். அபான வாயுவை (கழிவு இயக்கம்) கட்டுப்படுத்துவதன் மூலம் உடலின் வளர்ச்சியினால் ஏற்படும் மாறுபாடுகளையும் தடைபடுத்துகிறான், இம்மாதிரி, அழிவையும் வளர்ச்சியையும் சமனப்படுத்தி அந்த யோகி உயிரோட்டத்தையே கட்டுப்படுத்தக் கற்கிறான்." கீதையின் இன்னொரு பத்தி கூறுகிறது: "தன் பார்வையை இரு புருவங்களுக்கிடையில் நிலை நிறுத்தி, நாசி துவாரங்கள் மற்றும் சுவாச கோசங்கள் வழியாக பாயும் பிராண, அபான ஓட்டங்களை சமனப்படுத்தி, ஆசை, அச்சம், சினம் இவற்றை அறவே விட்டு, பேரின்பத்தை நாடி, வெளித்தோற்றங்களிலிருந்து தன்னை உள்ளிழுக்கவல்ல தியானத்தில் நிபுணனானவன் (முனி) சாசுவதமான முக்தனாகிறான். யோகத்தை விளக்கியவர்களில் முதன்மையானவரானபுராதன ரிஷி பதஞ்சலியால் கிரியா யோகம் இரண்டு இடங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அவர் எழுதியதாவது: "கிரியா யோகத்தில் உடலொழுக்கம், மன அடக்கம் மற்றும் ஓங்கார தியானம் ஆகியவை அடங்கியுள்ளன. பதஞ்சலி, தியானத்தில் உள்ளபடி கேட்கப்படும் பிரபஞ்ச ஒலியான ஓங்கார நாதமே இறைவன் என்கிறார். 'ஓம்' என்பது படைக்கும் சொல், பிரபஞ்ச இயந்திரத்தின்

மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும் “ஆன்மிகமலர் மெயில் புத்தகம்” பெற உங்கள் இமெயில் முகவரியை கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்
what-up no: 7299992699
aanmeegamalar@gmail.com

## மனித வாழ்வு மேம்படுவதற்காக

# பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்

சுழலோசை மற்றும் தெய்வீக முன்னிலையின் காட்சி ஆகும். யோகமார்க்கத்தில் தொடக்க நிலையில் இருப்பவர்கள்கூட விரைவில் ஓங்காரத்தின் அற்புதமான நாதத்தைக் கேட்கலாம். இந்த ஆனந்தமான ஆத்மானுபவத்தால் ஏற்படும் உற்சாகத்தின் மூலம் அவனுக்கு, தான் வானுலகப் பிரதேசங்களுடன் தொடர்பு கொண்டிருப்பதில் நம்பிக்கை ஏற்படுகிறது. பதஞ்சலி இரண்டாவது முறை கிரியா யுக்தியை அல்லது உயிர்சக்தி கட்டுப்பாட்டை இம்மாதிரி வர்ணிக்கிறார். “உட்சுவாச மற்றும் வெளிச்சுவாச யோகத்தைத் தனித்தனியே பிரித்து அதனால் பெறக்கூடிய பிராணாயாமத்தின் மூலம் முக்தியை பெற முடியும்.”

மேலும் பரமஹம்ஸர் அருளுகிறார்:

“என்றும் அழிக்க முடியாத இந்த யோகத் தை முன்னொரு அவதாரத்தில் பகவான் ஸ்ரீகிருஷ்ணன் முதன் முதலில் ஆதித்தியனுக்கு உபதேசித்தார். ஆதித்தியன் தன்னுடைய புத்திரனான வைவஸ்வதமனுவிற்கும், மனு இக்ஷ்வாகு மன்னனுக்கும் உபதேசித்தார். (சரித்திர காலத்திற்கு முன்பே மானவதர்ம சாஸ்திரங்களை அல்லது மனுநீதியை இயற்றியவர். ஆகமமாக ஸ்தாபிக்கப்பட்டுள்ள இப்பொதுவிதிகள் இந்தியாவில் இன்றுவரை நடப்பில் இருந்து வருகின்றன.) மனு, தலை சிறந்த நீதி சாஸ்திர விற்பன்னராவார்.

இப்படி பரம்பரையாக வந்த இந்த இராஜயோகத்தை ரிஷிகள் கலியுக ஆரம்பம் வரை காத்து வந்தனர். பிறகு புரோகிதர்கள் இரகசியமாக வைத்திருந்தாலும் மனிதனின் அசிரத்தையாலும் காலக்கிரமத்தில் இந்த புனிதஞானம் அடைய முடியாததாகிவிட்டது. புராதன ரிஷிகள் மனிதனுடைய பூவுலக மற்றும் விண்ணுலக சூழ்நிலையானது, ஒரு தொகுதியான பனிரெண்டு வருட சுழற்சிகளில் இயற்கையான பாதையில் அவனை முன்னேறச் செய்கிறது எனக் கண்டுபிடித்தனர். சமய நூல்கள், மனிதன் பேரண்ட உணர்வு அடையவும் அவனுடைய மனித மூளை முழுமை அடைவதற்கும் இயல் பான, வியாதியில்லாத பத்து லட்சம் வருட பரிணாம வளர்ச்சி தேவைப்படுகிறது என பறைசாற்றுகின்றன. ஒரு நாளில் 8½ (எட்டரை) மணிநேரத்தில் பயிலப்படும் ஆயிரம் கிரியைகள் ஒரு யோகிக்கு ஆயிரம் வருடங்களில் ஏற்படும் இயற்கையான பரிணாம வளர்ச்சியின் பலனைக் கொடுக்கின்றன. 3,65,000 வருடங்களில் ஏற்படும் பரிணாம வளர்ச்சி ஒரே வருடத்தில் கிடைக்கிறது. மூன்றே வருடங்களில் ஒரு கிரியாயோகி அறிவுடன் கூடிய தன் முயற்சியால் பத்து லட்சம் வருடங்களில் இயற்கை கொடுக்கக்கூடிய பரிணாம வளர்ச்சியை அடைகிறான். இந்தக் கிரியாவின் குறுக்குவழி மிக்க ஆழ்ந்த முறையில் முன்னேற்றமடைந்த யோகியால் மட்டுமே செயல்படுத்த முடியும். ஒரு குருவின் வழிகாட்டுதலுடன் அம்மாதிரியான யோகிகள் மிகத்தீவிரமான பயிற்சியால் ஏற்படும் சக்தியை தாங்குவதற்கு தங்கள் உடலையும் மூளையையும் மிகுந்த கவனத்துடன் பக்குவப்படுத்தியிருப்பார்கள்.”

“தொடக்க நிலையிலிருக்கும் கிரியா யோகி அவனுடைய யோகப்பயிற்சியை பதிநான்கிலிருந்து இருபத்திநான்கு தடவைகள் மட்டுமே தினந்தோறும் இருமுறைகள் செய்கிறான். அநேக யோகிகள் ஆறு, பனிரெண்டு, இருபத்திநான்கு அல்லது நாற்பத்திஎட்டு வருடங்களில் முக்தி அடைகிறார்கள். முழு ஞானத்தை அடைவதற்கு முன்னால் இறந்துவிடும் ஒரு யோகி தன்னுடைய கடந்த கால கிரியாவின் முயற்சியினால் விளையும் நல்ல கர்மபலனை தன்னுடன் எடுத்துச் செல்கிறான். அவனுடைய புது வாழ்க்கையில் அவன் இயற்கையாகவே அவனுடைய லட்சியத்தை நோக்கிச் செலுத்தப்படுகிறான். கிரியா யோகம் கீதையில் அடிக்கடி புகழப்பட்டிருக்கும் உண்மை யான வேள்வியாகும். யோகியானவன் தன் மனித இச்சைகளை ஒப்புவமையற்ற இறைவனுக்கு அர்ப்பணித்த அத்வைத வேள்வித்தீயில் இடுகிறான். இது எல்லா கடந்தகால மற்றும் நிகழ்கால இச்சைகளையும் இறையன்புத்தீயினால் எரிக்கும் ஓர் உண்மையான யோக வேள்வி சடங்காகும். முடிவான இந்தத் தீ எல்லா மனிதமதிமயக்கங்களையும் பலியாக ஏற்றுக்கொண்டு, மனிதனை களங்கத்திலிருந்து தூய்மைப்படுத்துகிறது. அவனுடைய உருவகமான எலும்புகளிலிருந்து இச்சையெனும் எல்லாச் சதையும் நீக்கப்பட்டு, கர்மவினையெனும் எலும்புக்கூடு, நோய் தடையாகிய ஞானம் என்கிற சூரியனால் வெளுக்கப்பட்டு, மனிதனின் முன்பும் படைத்தவனின் முன்பும் தீங்கற்றவனாகிக் கடைசியில் அவன் புனிதனாகிறான்.”

மேலும் குருதேவர் கூறுகிறார்: “சாதாரண மனிதனுடைய உடல் ஓர் ஐம்பது வாட் விளக்கைப்போன்றது. அதனால் அதிகப்படியான கிரியா பயிற்சியினால் உற்பத்தி செய்யப்படும் ஆயிரம் கோடி வாட் சக்தியை தாங்க முடியாது. கிரியாவின் இந்த எளிய மற்றும் குறையில்லாத பயிற்சிகள், படிப்படியாகவும் முறையாகவும் அதிகரிக்கப்படும்பொழுது மனிதனின் உடல் சூட்சுமமாக நாளுக்குநாள் மாறுகிறது. இறுதியில் பரமாத்மாவின் முதல் ஸ்தூல செயல் வெளிப்பாடான பேரண்ட சக்தியின் வரையறையற்ற ஆற்றலை வெளிப்படுத்தும் தகுதி உடையதாகிறது.”



அதற்கான சில உதாரணங்கள் கீழே தரப்பட்டுள்ளது:

1. கிரியா யோகமென்பது சாதாரணமாக நினைக்கக்கூடியதன்று. யார் ஒருவர் இறைவனுக்கு முக்கியத்துவமும் முன்னுரிமையும் கொடுக்கிறாரோ அவர்களுக்கு கிரியா யோகம் வேலை செய்யும். நல்ல மண்ணில் நல்ல விதை போட்டால் நல்ல அமோக விளைவை எதிர் பார்க்கலாம். அதே போன்று ஒருவன் தன் இதயத்தில் பிரபஞ்ச நாயகனான இறைவனை குடியிருத்தி மனமாகின்ற மண்ணை இறையருளின் கடலாக்கலாம். இவ்வுலகில் இறைவனைத் தவிர வேறு எதுவும் நிலையானதல்ல என்பதை மனப்பூர்வமாக அறிபவர்களும் மிகவும் வைராக்கியத்துடன் இறைவனை அடைவதற்காக மட்டுமே, இறைவனுக்காக வாழ்கின்றவர் யாராக இருந்தாலும் அவர்களுடைய மனம் மிகுந்த தெய்வீக அன்புடனும், எந்த நேரத்திலும் இறைவன் வருவான் என்று மிகுந்த நம்பிக்கையுடனும் அவனுடைய வருகையை எதிர்பார்த்து அவனை வரவேற்று ஏற்றுக் கொள்வதற்காகக் காத்திருக்கும் நிலையில் அவர்களின் மனநிலை இருக்கும். அதுமட்டுமின்றி, அவர் ஏற்கனவே இறைவனிடத்தில் முழுமையாக சரணாகதி அடைந்தவராகவும் இருப்பார். முழுமையாக சரணாகதி அடையவில்லையென்றால் மேலே கூறிய மனநிலை ஏற்படாது. உதாரணமாக, கடலில் சென்றுகொண்டிருக்கும் கப்பலுக்கு எதிர்பாராமல் புயலால் ஆபத்து வரப்போகிறது என்று வைத்துக்கொள்வோம். உடனே, நங்கூரமிட்டு கப்பலை நிறுத்தி பாதுகாக்கின்றது போல், இறைவனிடத்தில் முழு சரணாகதி அடைந்த இறைவனுக்கு மட்டும் குழந்தையாக இருக்கும் ஒருவர், இறைவனின் சித்தத்துடன் தன் சித்தத்தை நங்கூரமிட்டு நிறுத்துகிறார். அவர் எதற்கும் பயப்படத் தேவையில்லை. அவருக்கும்இறைவன்மேல் அசைக்கமுடியாதஒரு நம்பிக்கை தானாகவே ஏற்படும். அவர் தன்னையும் காப்பாற்றிக்கொண்டு தன்னுடன் இருப்பவர்களையும் இறைவனின் துணையுடன் காப்பாற்றிக் கொள்வார். சாதாரண மனிதனுக்கு ஏற்படுகின்ற மரணபயம் உள்பட அனைத்து பயமும் அறவே மறைந்துவிடும். யமனின் நிழல்கூட அவரை தொடமுடியாது. மாறாக யமன்தான் பயப்படவேண்டும். நாம் பயப்படவேண்டிய அவசியமில்லை. மார்க்கண்டேயன் கதை இதற்குப் பொருந்தும்.

2. களைகள் நிறைந்து மிகவும் காய்ந்த நிலையில் தரிசாகக் கிடக்கும் பூமியிலிருந்து, களைகளை எடுத்து நிலத்தை உழுது செம்மைப்படுத்தி, நல்ல நீர் பாய்ச்சி, உரம் போட்டு, பயிரிட்டு காத்திருந்து நல்ல விளைவை எடுக்கிறான் விவசாயி. அதேபோன்று மனமாகின்ற மண்ணில் முளைத்துள்ள கர்மாக்கள் எனும் களைகளை எடுத்து, தெய்வீக அன்பெனும் நீர்பாய்ச்சி, இறை அருள் எனும் உரம் போட்டு, மனமாகின்ற மண்ணை தியானம் எனும் மண்வெட்டியால் கிளறி, கிரியா எனும் சிறப்பு கலப்பையால் உழுது பக்குவப்படுத்தி, பின்னர் இறைவன் மிகவும் விரும்பும் ‘சரணாகதி’ எனும் மகத்தான விதையை போட்டு பயிரிடுகிறான். அதன் பின்னர், அவன் காத்திருந்து, மாபெரும் அல்லது அமோக எங்கும் கிடைக்கப்பெற இய லாத விளைச்சலான நறுமணமுடைய, அரிய தெய்வீக மலரான ‘இறை அன்பனை’அல்லது ‘இறைத் தந்தையை’ சாகுபடியாகப் பெறுகிறான், இறைவனுக்காக ஏங்கும் தெய்வீக விவசாயி. இறைவனுக்காக ஏங்குகிறவன் இறைவனை அடைவது நிச்சயம். அதுமட்டுமின்றி தன்னுடன் இருப்பவர்களையும் இறைவனுடன் இணையவைப்பான் அந்த தெய்வீக விவசாயி. இவையெல்லாம் மனிதனுள் இறைவன் இருப்பதாலும் அவன் அருளாலும் சாத்தியமாகிறதேயாகும். ஒருவன் தன் முழு உடலுடனும் முழு மனதுடனும் முழு ஆத்மாவுடனும் இறைவனுடன் ஒன்றிசைந்து செய்யும் கிரியா யோகத்தினால் மரண பயத்தை மட்டுமின்றி வாழ்க்கையில் ஏற்படும் திகில் தரக்கூடிய அனைந்து பயங்களையும் போக்கவல்ல யோகமே கிரியா யோகமாகும். இது இறைவனை அறிவதற்கும் அவனுடன் இணைவதற்கும் உதவகிறது. இதை மனிதனாகப் பிறந்த அனைவரும் பெறலாம். இது கிரியா யோகத்தினால் பெறப்படும் தெய்வீகப்பயனே ஆகும்.

மீண்டும் மலரும்

குருப்ரியா Cell No.9894595909




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.நாகராஜன்
♦♦♦
இணை ஆசிரியர்
முருகன்
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர், சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா Cell 9894595909
♦♦♦
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
♦♦♦
நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
7299992699/8939499598

## ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்ளுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
8939499598
7299992699 / 9677159070

# உணவே மருந்தான காலம் போய் உணவே நோயான அவலம்

இன்றைய காலகட்டத்தில் உணவே பல்வேறு நோய்களுக்கு காரணமாக மாறிவிட்டது. ஒரு காலத்தில் உணவே மருந்தாக இருந்த நிலை மாறி தற்போது உணவே நோயாகவும் மாறிவிட்டது.

வளர்ந்து வரும் நாகரீக மோகமும், வரைமுறையற்ற உணவு பழக்க வழக்கங்களுமே மேற்கூறிய உணவே நோய்க்கான காரணம் என்பதை நன்றாக அறிந்திருந்தாலும், வாழ்க்கைச் சக்கர ஓட்டத்தில் அதை யாரும் பெரியதாக கண்டு கொள்வதில்லை.

விளைவு....

நோய்நொடி என்று வரும்போது மனம் மட்டுமல்ல, உடலும் வேதனையை அனுபவிப்பதே விளைவாக மாறிவிடுகிறது.

தற்போதைய ஆராய்ச்சிப்படி, தமிழ் நாட்டில் அதிக அளவில் சர்க்கரை நோய் இருப்பதற்கு காரணம் தினமும் அரிசி சாதம் சாப்பிடுவது என்று பலரும் சொல்கிறார்கள். அது தவறு. அதை எப்படி சாப்பிடுகிறோம் என்பது தான் முக்கியம்.

சாதத்தை எப்படி சாப்பிடுகிறோம் என்பதில்தான் நல்ல உடல் நலத்துக்கான சூட்சமம் இருக்கிறதாம்.

அந்தவகையில் சாதத்தையும், சாதக் கஞ்சியையும் எவ்வாறு சாப்பிட வேண்டும் என்று நம் முன்னோர்கள் சில வழிமுறைகளை வகுத்துள்ளனர் அவற்றை பார்ப்போம்.

- பலரும் இன்று குக்கரில் வேகவைத்த சாதம் சாப்பிடுகிறார் கள். கஞ்சியை வடிக்காமல் சாதம் சாப்பிடுவதால் தான் நீரிழிவு ஏற்படுகிறது.
- சாதம் வடித்த கஞ்சி சூடாக இருக்கும்போது சிறிது உப்பைப் போட்டு பருகினால் கண் எரிச்சல், பித்தம் ஆகிய வை அகலும்.
- அதுவே கஞ்சி ஆறிப்போய் குடித்தால் வாயுவை ஏற்படுத் தும்.
- சாதம் உலையில் கொதிக்கும் போதே கஞ்சியை எடுத்துப் பருகினால் நீர்க்கடுப்பை நீக்கும்.
- கொதிக்கக்கொதிக்க சோறு சாப்பிடக்கூடாது. மிதமான சூட்டிலேயே சாப்பிட வேண்டும்.
- அதே நேரம் சில்லென்று ஆறிப்போய் சாப்பிட்டால் கீல் வாதம், மூட்டு வாதத்தை ஏற்படுத்தும்.
- பழையமுது சாப்பிட்டுத்தான் நம் முன்னோர் நல்ல தெம்புடனும் ஆரோக்கியத்துடனும் வாழ்ந்தார்கள்.
- முதல் நாள் தண்ணீர் சாதத்தில் ஊற்றி, மறு நாள் காலையில் பழைய சோற்றை சாப்பிடுவது உடலுக்கு குளிர்ச்சி, வலிமை தருவதுடன் வயிற்றுக்கோளாறு, அல்சர், மூட்டு வலி, தோல் நோய்கள் எதுவும் பாதிக்காமல் பாதுகாக்கிறது.
- பழைய சோற்றில் தயிர் ஊற்றி சாப்பிடக்கூடாது. மோரைக்கடைந்து ஊற்றி சாப்பிட வேண்டும்.
- சோறு வெதுவெதுப்பாக இருக்கையில் பசும்பால் ஊற்றி சாப்பிட்டால் தண்ணீர்த்தாகம் ஏற்படுவதும் பித்தம் உண்டாவதும் நீங்கும்.
- பச்சரிசி சோற்றில் பால் சேர்த்துச்சாப்பிட வாதம், பித்தம் நீங்கும். சிலர் சாம்பார், ரசம், வற்றல்குழம்பு என்று சாதத்தில் பிசைந்து சாப்பிட்டு மோர் போட்டு சாப்பிடாமல் எழுந்து விடுவார்கள். இது உடம்புக்கு மிகவும் கெடுதல்.
- மோர் சாதம் செரிமானக் கோளாறுகளை நீக்கி, வாதம், பித்ததை தணிக்கிறது.
- மாதாந்திர பிரச்சினை உள்ள பெண்களுக்கு சிவப்பரிசி சாதம் மிகவும் நல்லது.
- சம்பா சோறு வயிற்றுப்பொருமலுக்கு மிகவும் நல்லது.
- வாழையிலையில் சாப்பிடுவதால் அதிலுள்ள துவர்ப்பு சத்து உடலில் சேர்ந்து நன்மை செய்கிறது.



ஆன்மிகமலர்
மெயில் புக்
ஆன்மிகமலர்
மெயில் புக்

## விளம்பர விபரம்

அரை பக்க விளம்பரம்
ரூ.2500
முழு பக்க விளம்பரம்
ரூ.5000
பேக்கேஜ் விளம்பரங்களும் ஏற்றுக் கொள்ளப்படும்
விளம்பர ஏஜென்சிகளும் வரவேற்கப்படுகிறார்கள்

கோவில்களில் நடைபெறும், நடைபெற்ற, நிகழ்ச்சிகளை இலவசமாக பிரசுரிக்கிறோம். நிகழ்ச்சி பற்றி முழு தகவலையும் கோவிலின் புகைப்படத்தையும் அனுப்பிவைக்கவும்

விளம்பர தொடர்புக்கு:
8939499598 / 9677159070
aanmeegamalar@gmail.com

## உங்களைத்தான் தேடுகிறோம்...

ஆன்மீகமலர்.காம்
இணையதளத்தின் மூலம் வெளிவரும் ஆன்மீகமலர்.காம் மெயில் புத்தகத்தில் நீங்களும் துணை ஆசிரியராக வாய்ப்பளிக்கிறோம்...
உங்கள் ஊரில் உள்ள கோயில், மடம், சித்தர்கள், ஆன்மீக சேவை புரியும் அன்பர்கள், உழவாரப்பணி செய்யும் அன்பர்கள், கோயிலின் சிறப்புகள் போன்றவற்றை தொகுத்து வழங்க விருப்பமிருந்தால் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
எங்களுடன் நீங்களும் இணைந்து ஆன்மீக சேவை புரியலாம்...

தொடர்பு கொள்ளவும்:
7299992699 / 8939499598
aanmeegamalar@gmail.com

# மறைந்திருக்கும் உண்மைகள்

ஓஷோவின் மறைந்திருக்கும் உண்மைகள் படித்து இருக்கிறீர்களா?

ஒரு பேச்சுக்கு, ஏதோ ஒரு அசம்பாவிதம், ஒரு மூன்றாம் உலக யுத்தம் மாதிரி ஒன்று நடந்து இந்த உலகில் பேரழிவு நடக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். நாம் இப்போது உபயோகிக்கும் (satellite) செயற்கைக்கோள்கள் எல்லாம் ஸ்தம்பித் துப் போய்விட்டது. செயல் இழந்து விட்டது. உலகமே 90% அழிந்துவிட்டது. பெட்ரோல் எல்லாம் காலி. மின் உற்பத்தியே இல்லை .

உலகமே கற்காலம் போல் ஆகி விட்டது. மக்கள் கோடிக்கணக்கில் மடிந்து விட்டனர். இப்படிப்பட்ட சூழ்நிலையில் மீதி இருக்கும் மக்கள் மன நிலை எப்படி இருக்கும்?

டிவி, கம்ப்யூட்டர், கார், ரேடியோ, மொபைல் போன், எல்லாமே வேலை செய்யாது... வெறுமனே டப்பா... தான். பொம்மை மாதிரி தான். ஒன்னும் பிரயோஜனப் படாது.... இல்லையா? ஆனால், அதே சமயத்தில் அதை உபயோகித்தவர்கள் வெளியிலும் தூக்கி எறிய மாட்டார்கள்... அது பாட்டுக்கு வீட்டிலே இருக்கும். பரண் மேலே இருக்கும். அல்லது ஏதாவது மூலையிலே இருக்கும்.. அடுத்த அடுத்த சந்ததிக்கு அதோட பலன் தெரிய வந்தா பரவா இல்லை.. இல்லை நாளடைவிலே.. அப்படியே மறைஞ்சு போயிடும்.. திரும்ப என்னைக்கவாது ஒரு நாள், எத்தனையோ வருஷம் கழிச்சு திரும்ப satellites கண்டுபிடிச்சா, எண்ணைக் கிணறு கண்டு பிடிச்சா இது எல்லாமே, திரும்ப உபயோகப்படும்.. .. ஒத்துக்கிறீங்களா?

இதே மாதிரி தான்.. கோவில் ஒரு செல்போன் டவர் மாதிரி. கடவுள் ஒரு விண்ணில் இருக்கும் கோள் மாதிரி கற்பனை பண்ணிக்குவோம்.. அங்கே இருந்து சிக்னல் வாங்கி உங்களுக்கு தருகிற டவர் தான் ஆலயங்கள். ஜீவ சமாதிகள்.. அதன் மூலமா எத்தனை எத்தனையோ ஆத்மாக்கள் பலன் அடைஞ்சு இருக்கலாம்.. அந்த கதிர் activation பலமா இருக்கிற ஆலயங்கள் இன்னும் இருக்கு. நீங்க ஒரு மொபைல் போன் மாதிரி. நீங்க அந்த டவர்க் கிட்டே எவ்வளவுக் கெவ்வளவு நெருக்கமா இருக்கிறீங்களோ, அந்த அளவு சிக்னல் கிளீயரா இருக்கும். அதனாலே பலனும் இருக்கும். இல்லை, சிக்னல் கிடைக்காது.. நாட் ரீச்சபிள் தான்.

அந்த ஆலயங்களுக்கு சார்ஜ் பண்றதுக்கு தான் கும்பாபிஷேகம் அந்த கும்பம் இறைவனிடம் இருந்து கதிர் அலைகளை, உள்ளே இருக்கிற கர்ப்ப கிரகத்துக்கு அனுப்புகிறது.. தீப ஆராதனை காட்டுறப்போ அது இன்னும் தூண்டப்படும்.. அருள் அலைகள் உள்ளே இருக்கும் அனைவருக்கும் கிடைக்கும்.. கையை மேலே தூக்கி அந்த நேரத்திலே வேண்டுவாங்க... இல்லையா? .. உயரமா இருக்கிற அந்த கைவிரல்கள் மூலம் உள்ளுக்குள் அந்த அலைகள் உங்களுக்குள் இறங்கும்..

இதைப் போலே ஏராளமான விஷயங்கள் , நம்மை அறியாமலே , நாம் செய்து கொண்டு தான் இருக்கிறோம்..அதற்கு விளக்கம் தான் தெரிவது இல்லை.. ஆனால் தொடர்ந்து செய்கிறோம்.. அதன் முழு பலன்களும், கண்டிப்பாக , நாம் உணரும் பொது தான் தெரிய வரும்..

satellite இருக்கு (ஆண்டவன் ) . செல் போன் டவர் (ஆலயம் ) இருக்கு. செல் போனும் (நாம் தான்), சிம் கார்டும் (மனசு) இருக்கு. ஆனாலும், நமக்கு செல் போன் உபயோகம் தெரிஞ் சா தானே .. அதை உபயோகப் படுத்த முடியும்.. இல்லை , வெறுமனே பொம்மை தானே.

அதைப் போலே, பொம்மை மாதிரி தான் .. நாம் இருக்கிறோம்.. நம்மை உணர னும்.. இறையை உணரனும்.. பிறகு, நமக்கு எல்லாமே புரிய வரும்..

அதுவரை சிக்னல் கிடைக்கவே வாய்ப்பு இல்லாத பொம்மை தான் மனிதர்கள்..

இந்த கோட்பாடுகளை தெளிவாக உணர்ந்து, நாம் நம்மை உணரும் வரை... நமது சக்தி தெரியாதவர்கள் தான்.. மனம் என்னும் சாவி கொடுக்கும், விசையால் சொடுக்கப்பட்டு நடமாடும் வெறும் பொம்மைகள்.

நாம் காலை எழுந்தது முதல், இரவு வரையில், எத்தனையோ இடங்களுக்கு போகிறோம். இவைக ளோடு, கோவிலுக்கு போவது என்ற பழக்கத்தையும் வைத்துக் கொள்வது நல்லது. பகல் முழுவதும் மனதில் என்னென்னவோ எண்ணங்கள் அலை மோதுகிறது.

அதனால், தினமும் ஒரு முறையாவது, கோவி லுக்குச் சென்று வர வேண்டும். பிறருக்காக உழைக் கிறோம்; சம்பாதித்து போடுகிறோம்; குடும்பத்தை கவனிக்கிறோம். இதெல்லாம் ஒரு கடமை. அதேபோல தன் நன்மைக்கும், ஆத்ம லாபத்துக்கும், பரலோக சுகத்துக்கும் சுலபமான வழி, பகவானை வழிபடுவது தான்.

“பகவான் தான் எங்கும் இருக்கிறாரே கோவி லுக்கு ஏன் போக வேண்டும்? வீட்டிலிருந்து கொண்டே அவரை நினைத்தால் போதாதா?’ என்று வேதாந்தம் பேசுவதில், பிரயோஜனமில்லை.

பூமியின் அடியில் எங்கும் நீர் நிறைந்துள்ளது; ஆனால், நமக்கு தண்ணீர் வேண்டுமானால், ஒரு கிணற்றிலிருந்தோ, குளத்திலிருந்தோ தான் எடுக்க வேண்டியுள்ளது.

பசுவின் மடியில் பால் உள்ளது. பால் வேண் டுமானால், அதன் மடியிலிருந்து தான் பால் கறக்க முடியும்; அதன் கொம்பை திருகினால், பால் வருமா? அதுபோல எங்கும் கடவுள் இருக்கிறார் என்றாலும், நாம் நாலு பக்கமும் சுற்றி, சுற்றிப் பார்த்தாலும், கடவுளைக் கண்டோம் என்று சொல்ல முடியாது.

கோவிலுக்குப் போய், கடவுளை தரிசித் தால் தான், மன நிம்மதி கிடைக்கும். கோவிலுக்குள் உள்ள தெய்வம் வெறும் சிலையல்ல; அது மந்திர பூர்வமாக பிரதிஷ்டை செய்யப்பட்டு, தெய்வ சாந் நித்யம் கொண்டது. கண்ணுக்கு தெரியாத கடவுளை, அந்த விக்ர கத்தில் ஆவாகனம் செய்து

**ஒரு மேஜை இருந்தால், அதை செய்த ஒரு தச்சர் இருந்து தானே ஆக வேண்டும். பூமி, சூரியன், பிற கோள்கள் என்று இருந்தால் அதைப் படைத்தவர், ஒரு சக்தி இருந்து தானே ஆக வேண்டும்..**





வைத்திருக்கின்றனர்.

அதற்கு காலா காலத்தில் அபிஷேகம், அலங்காரம், ஆராதனை, தூப தீப நைவேத்தியம், கற்பூர ஆரத்தி என்று வரிசையாக உபசாரங்கள் உள்ளன. இது, ஒவ்வொரு நாளும் ஆறு காலம், நான்கு காலம், மூன்று காலம் என்று நியமனம் செய்து, அதன்படி நடந்து வருகிறது. அதனால், ஏதாவது ஒரு கால பூஜையையாவது பார்த்து, தரிசனம் செய்து வருவது நல்லது. சிந்து சமவெளி நாகரிகம் என்று , தொல் பொருள் துறையினர் சுமார் ஐந்தாயிரம் வருடங்களுக்கு முன் இருந்த, ஒரு நாகரீகம் மிக்க மனிதர்கள் வாழ்ந்து இருக்கக் கூடும் என்று நிருபித்து இருக்கின்றனர்.. யோசித்துப் பாருங்கள்.. அப்படிப் பட்ட ஒரு உலகம், ஏதோ ஒரு காரணத்தால் கிட்டத் தட்ட ஒட்டு மொத்தமாக அழிந்து இருக்கிறது..

அதன் பிறகு கொஞ்சம் கொஞ்சமாக, ஒரு இரண்டாயிரம வருடமாக, ஒரு வரலாறு ஓரளவுக்கு தெரிந்து இருக்கிறது.. எந்த காலத்தில் இருந்தோ, நமது முன்னோர்களில் ஒருவர், இந்த ஆலயங்களின் பயன்பாடுகள் தெரிந்து, அவர் சந்ததிக்கு சொல்லி, அதில் ஒரு 0 .0000001 % கருத்து உண்மையாய் இருந்ததால், இன்றும் ஆலயங்கள், வழிபாடுகள், தியானங்கள் கடை பிடிக்கப்பட்டு வருகின்றன..

எதுவும் கேலிப் பொருள் அல்ல. அதை உணர நமக்கு நேரம் ஆகலாம். பூமி அந்தரத்தில், ஏதோ ஒரு விசைக்கு கட்டுப் பட்டு ஒரு குறிப்பிட்ட சாய்வில் பந்து போல , தானும் சுற்றிக் கொண்டு ஒரு குறிப்பிட்ட பாதையில் பயணித்துக் கொண்டும் இருக்கிறது...

ஒரு மேஜை இருந்தால், அதை செய்த ஒரு தச்சர் இருந்து தானே ஆக வேண்டும். பூமி, சூரியன், பிற கோள்கள் என்று இருந்தால் அதைப் படைத்தவர், ஒரு சக்தி இருந்து தானே ஆக வேண்டும்.. அந்த சக்தி, எந்த சக்திக்கு கட்டுப்பட்டு இந்த பிரபஞ்சம் இயங்குகிறதோ, அந்த சக்தி கோடி சமுத்திரம் போன்றது.. அந்த சக்திக் கடலில் இருந்து, தெறித்த துளிகள் போல இயங்குபவை தான் உலகமும், நாமும்... நாமும் நம்மை உணரும் போது, அந்த சமுத்திரத்தில் நமது ஐக்கியம் புரிய வரும்..

இப்படி ஏராளமான ரகசியங்களை, சக்தியை உள்ளடக்கி இருப்பவை தான் , சதுரகிரி, திருவண்ணாமலை, திருப்பதி, பழனி போன்ற மலைகளும், இதைப் போன்ற பிற ஆலயங்களும்...!! மன நிம்மதி உங்களுக்கு கிடைப் பது உறுதி.







# தீய சக்திகளை துரத்தியடிக்கும் வெண்கடுகு சாம்பிராணி புகை



வீட்டில் புகுந்து கொள்ளும் தீய சக்திகளை விலக்குவது கடினம் அல்ல. ஆனால் வீட்டில் அமைதி இன்மைக்குக் காரணமே தீய சக்திகள்தான் என்பது மட்டும் சத்தியமான உண்மை. ஒற்றுமையாக இருந்து வந்த குடும்பங்கள் கூட சிறு சிறு பிரச்சனைகளினால் மன ஒற்றுமை இன்றி சிதறும் என்பதின் காரணம் அந்த தீய ஆவிகளின் செயல்பாடினால்தான் .

ஆகவே அப்படிப்பட்ட தீய சக்திகள் வீடுகளில் புகுந்து கொள்ளும்போது அவற்றின் தீமையைக் குறைக்கும் வழி முறை என்ன? மனதளவில் பிரிந்து உள்ள குடும்பங்கள் ஒன்று சேரவும், குடும்பத்தில் எப்போதும் அமைதி நிலவவும், வீட்டில் உள்ள தீய சக்திகள் வெளியேறவும் ஒரு எளிய பரிகாரம் உள்ளது.

வீடுகளில் மன அமைதி இல்லாமல், குடும்ப ஒற்றுமை இல்லாமல் உள்ளவர்கள் சாம்பிராணி தூபத்தைப் போட வேண்டும். அதில் சிறிதளவு வெள்ளைக் கடுகை (வெண்கடுகு என்பார்கள்) போட்டு விட்டு வீட்டில் அனைத்து அறைகளிலும் எடுத்துச் சென்று அந்தப் புகையைக் பரவ விட்டு வந்து ஸ்வாமி அறையில் வைத்து விட வேண்டும். அதன் பின் நடப்பதைப் பாருங்கள். வீட்டில் அந்நாள் வரை இருந்து வந்த தீய சக்திகள் மறைந்து மன அமைதி மெல்ல மெல்ல அதிகமா வதைக் காணலாம்.

வெண் கடுகிற்கு அத்தனை சக்தியா? அது எதனால்? அதன் காரணத்தைக் கேட்டபோது ஒரு பண்டிதர் கீழ் கண்ட காரணங்களைக் கூறினார். வெண் கடுகு சாமான்யமான பொருள் அல்ல. அது கடவுள் தன்மையைக் கொண்டது. அது தேவ கணம் ஆகும். வெண்கடுகு எனும் வெண் கணங்களின் மத்தியில் பைரவர் உள்ளார்.

ஒரு அரசன் சிறப்பாக நாட்டை ஆண்டான், அவன் மீது பொறாமைக் கொண்ட விரோதிகள் அவன் மீது தீய ஏவல்களை ஏவி விட்டார்கள். அதனால் நாளடைவில் அவனால் எதையும் சரிவர யோசனை செய்ய முடியாமல் தத்தளித்தான். அவன் குடும்பத்திலும் அமைதி குலைந்தது. ஆகவே அவன் தனது ராஜ குருவை அழைத்து தன்னுடைய சங்கடங்களைக் கூறி அதற்குப் பரிகாரம் கேட்டான். ராஜகுருவும் அவனுக்கு ஒரு விசேஷ பூஜையை செய்யுமாறு அறிவுரை செய்தார்.

அதன்படி ஒரு மண்டலம் பைரவப் பெருமா னுக்கு வெண்கடுகு, இலாமச்சம்வேர், சந்தனம், அறுகு என்னும் நான்கையும் கொண்டு பாத பூஜை செய்தப் பின் சாம்பிராணியை தூபத்தை ஏற்றி வைத்து அதன் தூபத்தில் வெண் கடுகைப் போட்டு வீடு முழுவதும் அந்தப் புகையைக் காட்டினால் தீய சக்திகள் ஓடிவிடும் என்றும் கூறினார்.

எதற்காக பாத பூஜையிலும் சாம்பிராணிப் புகையிலும் வெண் கடுகை பயன்படுத்த வேண்டும் என்று மன்னன் கேட்க ராஜ குரு கூறினார் ‘ மன்னா, வெள்ளைக் கடுகுச் செடிகள் குளிர்ச்சியை தருபவை. அவை இமய மலையை சுற்றிக் காவல் புரியும் பைரவரின் தேவ கணங்கள். ஆகவேதான் அவை அதிகம் இமய மலை அடிவாரங்களில் காணப்படும். பிரபஞ் சத்தின் அனைத்து தீய சக்திகளையும் அடக்கி ஒடுக்கி வைத்துள்ளவர் பைரவர் ஆவார். ஆகவே வெண் கடுகு உள்ள இடத்தில் தீய சக்திகள் இருக்க முடியாது. அவை புகையாக மாறும்போது, அதன் உள்ளே உள்ள தேவ கணங்கள் தீய ஆவிகளை அடித்துத் துரத்தும். என்றார்.



# காயத்திரி மந்திரத்தின் மகிமையும் பலனும்

காயத்திரி மந்திரம் என்பது மனித உடலை இயக்கும் ஒரு அற்புத சக்தி வாய்ந்த மந்திரக் கலை என்றே சொல்லலாம். இந்த மந்திரத்தை உச்சரிக்க நாம் செலவிடும் காற்றின் வேகம் மற்றும் வார்த்தையின் உச்சரிப்பு போன்றவை மனித உடலை அற்புதமாக இயக்கத் தேவைப்படும் ஆற்றலை தூண்டுவதாக அமைகிறது.

உதாதரணத்திற்கு மனித உடலில் உள்ள நோய்களை ஒருசில வர்மக்கலை மூலமும், அக்குபிரஷர் என்ற ஊசியால் நரம்பு மண்டலத்தை செயல்பட வைப்பதும், யோகக்கலையால் ப்ராண சக்தியைக் கொண்டு மனித உடலுக்கு தேவையான ஆற்றலை பெறுவதைப் போன்று,

காயத்ரி மந்திரத்தை உச்சரிப்பு மாறாமல் சொல்வதாலும் மனித உடலுக்கு பல்வேறு அற்புதப் பலன்கள் கிடைக்கும்.

காயத்ரி மந்திரத்தினைப் பற்றி சுவாமி விவேகானந்தர் குறிப்பிடும் பொழுது, ‘மந்திரங்களின் கிரீடம் காயத்ரி மந்திரம்’ எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஜேபிஎஸ் ஹால்டேன் என்ற பிரபல விஞ்ஞானி (1892–1964) காயத்ரி மந்திரத்தினைப் பற்றி குறிப்பிடும் பொழுது காயத்ரி மந்திரம் ஒவ்வொரு இரசாயன கூடங்களின் வாயில் கதவிலும் காயத்ரி மந்திரம் பொறிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கீதையில் ‘நதிகளில் நான் கங்கையாகவும், மலைகளில் நான் விந்திய மலையாகவும், மந்திரங்களில் நான் காயத்ரி மந்திரமாகவும் இருக்கின்றேன்’ என்று குறிப்பிட்டுள்ளார்.

சுவாமி இராம கிருஷ்ண பரமஹம்சர் கூறுகையில் ‘பெரிய பெரிய கடுந்தவ முயற்சி களில் மனிதர்கள் ஈடுபடுவதனைக் காட்டிலும், காயத்ரி மந்திரத்தினை ஜபிப்பது மிகப்பெரிய சாதனையாகும். இது மிக சிறிய மந்திரம்தான். ஆனால், மிக மிக சக்தி வாய்ந்தது எனக் குறிப்பிட்டுள்ளார்.

காஞ்சி பெரியவர் காயத்ரி ஒரு சிறந்த மனத் தூய்மைக்கான அருமருந்து என்கிறார்.

ஸ்ரீ சத்ய சாயி பாபா “ஒரு நாளைக்கு குறைந்தது 3 முறையாவது கூறுங்கள். குறிப்பாக குளிக்கும் போது கட்டாயம் கூறுங்கள். அப்போது உடல் தூய்மையுடன் மனத்தூய்மையும் ஏற்படும்“ என்கிறார்.



பிரபல மேலை நாட்டு ஞானி ஆர்தர் கொயெஸ்ட்லர் ‘காயத்ரி மந்திரம் 1000 ஆட்டம் பாம்களுக்குச் சமம்’ எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஜெர்மன் தத்துவ ஞானி மெக்ஸ் முல்லர் (1823–1900) அவர்கள் ‘ஒளியினை தவம் செய்து நம் மூளை, மனதினை உயர்த்துவோம்’ எனக் குறிப்பிட்டுள்ளார்.

மகாத்மா காந்தி (1869–1948) அவர்கள் ‘யார் ஒருவர் காயத்ரி மந்திரத்தினை ஜபிக் கின்றாரோ அவன் நோய்க்கு ஆளாக மாட்டார்’ எனக் குறிப்பிட்டுள்ளார்.

காயத்ரி மந்திரத்தினை சொல்லுவதன் பொருள் ‘உயர் அறிவு சக்தியினை அளித்து, அறியாமையை நீக்க வேண்டும்’ என்பதாகும்.

இம்மந்திரம் சொல்லப்படும் பொழுது எழும் அதிர்வுகள் உடலில் 24 சுரப்பிகளை ஊக்குவிக்கின்றது. இதன் காரணமாக 24 வகை சக்திகள் உடலில் உண்டா கின்றன.

காயத்ரி மந்திரத்திற்கு ஜாதி, மதம் என்ற எந்த பிரிவும் கிடையாது.

| | | |
|---|---|---|
| தத் | – | வெற்றி |
| ச | – | வீரம் |
| வி | – | பராமரிப்பு |
| து | – | நன்மை |
| வ | – | ஒற்றுமை |
| ரி | – | அன்பு |
| நி | – | பணம் |
| யம் | – | அறிவு |
| ஃபர் | – | பாதுகாப்பு |
| க்கோ | – | ஞானம் |
| த்தி | – | அழுத்தம் |
| வா | – | பக்தி |
| ஸ்யா | – | நினைவாற்றல் |
| ஃத்தி | – | மூச்சு |
| மா | – | சுய ஒழுக்கம் |
| யோ | – | விழிப்புணர்வு |
| யோ | – | உருவாக்குதல் |
| நஹ | – | இனிமை |
| பரா | – | நல்லது |
| சோ | – | தைரியம் |
| த்தா | – | ஞானம் |
| யட் | – | சேவை |


ஆன்மிகமலர் மெயில் புக்
16–31 மே 2017 27
www.aanmeegamalar.com

உலகில் உள்ள அனைவருக்கும் பொது வான மந்திரம் தான் காயத்ரி மந்திரம்.

**ஓம் பூர் : புவ : ஸீவ:**
**தத் ஸவிதுர் வரேண்யம்**
**பர்கோ தேவஸ்ய தீமஹி**
**தியோ : யோந: ப்ரசோதயாத்**

ஓம் – தெய்வீக சக்தி, ஒலி சின்னம்
ப்பூ – உடல் விமானம்
புவஹா – நிழலிடா விமானம்
ஸ்வ – வான விமானம்
தத் – அந்த தலை தெய்வத்தின்
ஸவித்து – பிரபஞ்சம் தயையும் சக்தி
வரேன்யம் – வணங்க வேண்டும்
பர்கோ – பிரபல
தேவஸ்ய – பிரகாசமிக்க
தீமஹி – நம் த்யானம்
தியோ – அறிவினை
யா – யார்
நஹ – எங்கள்
ப்ரசோதயாத் – தெளிவுப்படுத்துங்கள்

நம் புத்தியை இயங்கச் செய்யும் பரமாத் மாவை நாம் வணங்குவோம் என்பது சுருக்கமான பொருள்.

இம் மந்திரம் ரிஷி விஸ்வாமித்திரரால் கண்டுபிடிக்கப்பட்டது. சூரிய பகவானை நோக்கி வழிபடுவதாக இம் மந்திரம் அமைந் துள்ளது. மிக அதிக சக்தி கொண்டது.

அதிர்வுகள் மூலம் ஆக்கப்பூர்வ சக்தி யினை ஏற்படுத்துவது. வேதங்களின் தாய் தான் காயத்ரி தேவி.

இம் மந்திரம் சொல்லப்படும் இடங்களில் எல்லாம் இத்தேவி இருப்பாள். இத் தேவிக்கு சாவித்திரி, சரஸ்வதி என்ற பெயரும் உண்டு. காயத்ரி ஐம்புலன்களின் அதிபதி.

சாவித்திரி ப்ராண சக்தி. சாவித்திரி என்பது உண்மையைக் குறிக்கின்றது. சரஸ்வதி வாக்கின் அதிபதி. ஆக, உண்மையான சிந் தனை, சொல், செயல் இவற்றினை குறிப்பதாக அமைகின்றது.

காயத்ரி மந்திரம் வேதத்தின் சாரம். இத னை முழு கவனத்தோடு சொல்ல வேண்டும். காலை, மாலை இருவேளையும் சொல்லலாம். அனைவரும் சொல்லலாம். இருதயம் சுத்த மாகும்.

தீய எண்ணங்கள், கவலைகள் நீங்கும். குறிப் பாக, பள்ளி மாணவர் திறமையாகப் படிப்பார்கள்.

## காயத்ரி மந்திரம் ஜபிப்பதன் பலன்கள்:

- கம்பீரத் தோற்றம்
- தரமான பேச்சு
- வறுமை, குறை நீங்குதல்
- பாதுகாப்பு வட்டம்
- கண்ணில் அறிவு தெரிதல்
- அபாயம், தேவையற்ற சூழ்நிலை நீங்கும்
- நரம்புகளும், சுரப்பிகளும் ஊக்குவிக்கப்படும்
- அமைதியாய் இருப்பர்
- நற்செயல்களில் ஈடுபடுவர்
- காந்த சக்தி ஆகியவை உருவாகும்.
- வாழ்க்கையில் தடைகளை நீக்கும்
- மூளையை பிரகாசிக்கச் செய்யும்
- உள்ளுணர்வினை தெளி வாக்கும்
- உயர் உண்மைகள் தெரிய வரும்

– ஷ்யாம் சுந்தர்



Endowment Plan, Term Insurance, Money Back Plan, Health Plan, Marriage Plan, Child Plane, Education Plan, Retirement Plan, Pension Plan
P.PUNITHAVEL (Insurance Consultant)
Ph: 98418 07572
CBO-22, No. 128, Bricklin Road, Purasaiwalkam, Chennai 600 007





# வாருங்கள் எங்களுடன் பயணிக்க...

**உலக அளவில் இமெயில் மூலம் இலவச இதழாக வெளிவரும் நமது இதழில் ஆன்மிக நாட்டமும் விருப்பமும் உள்ள அன்பர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.**

**உங்களுக்கு தெரிந்த திருக்கோயில்கள், மகான்கள், சித்தர்கள், இந்துமத சடங்கு-சம்பிரதாயம் போன்றவற்றை**

**(உங்களது பெயர், முகவரி, தொ.பே.எண்ணுடன்)**

**எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். நமது வாசகர்கள் பயன்படுத்த பிரசுரிப்போம். தெரியாதவர் தெரிந்து கொள்ள எங்கள் பயணத்தில் நீங்களும் இணைந்து பயணியுங்கள்**

தொடர்பு கொள்ளவும்:
**ஆசிரியர்: நாகராஜன்**
16, பாரதீஷ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம்
பொன்மணிமாளிகை அருகில்,
சென்னை 600024, தமிழ்நாடு, இந்தியா
தொலைபேசி 7299992699/ 8939499598

# Talks With Thali

## உணர்வற்ற முறையில் உடலில் பூசப்படும் திருநீறும், திருமண்ணும்?

இறைவன் தன்னை மறைத்துக் கொள்ள விரும்பாதவன் என்பதால் தான் நாம் அவனை உணர விருப்பம் கொள்கிறோம்.

நாம் உணர விருப்பம் கொள்வதால் மட்டும் நம் உணர்வாய் அவன் பிரதிபலிப்பதில்லை.

உணரக்கூடியவர் யாரோ அவர் உணர் வின் மெல்லிய நாதத்தில் தன்னை கரைத்துக் கொள்ளகூடியவராய் இருத்தல் அவசியம்.

மென்மை இயல்பாய் அமைவது என்பது துர்லபம்.

இயல்பை அமைத்துக் கொள்ளுதல் என்பது மிகவும் எளிதான விஷயம். ஆனால் நீடிக்காது என்பதால் உணர்வற்ற வேஷம் மட்டுமே நமது இறையுணர்வாய் நம்மில் பிரதி பலிக்கும்.

உணர்வற்ற திருநீறும், திருமண்ணும் நம் உடலில் எந்த மூலையில் பூசப்பட்டாலும் அதனால் ஆவப்போவது என்ன?..

ஆலயத்திற்குள் நுழையும் போது மூன்று விரல் அளவும், அலுவலகத்திற்குள் நுழையும் போது ஒரு விரலின் நுனியளவுமாய் மாறிப் போவதில் உணர்வு எங்கே வாழும்?.

உலகியலின் உணர்வு கால சூழ்நிலைக் கேற்ப மாறும். ஆனால் இறையுணர்வு என்பது கால சூழ்நிலை அறியாதது.

மென்மை அடிக்கடி தம்மை மாற்றிக் கொள்ள விரும்பாது. அதுவே மென்மையின் அடிநாதம். நாதம் மாறுபடுவதில்லை நாதத்தினை விரும்புபவனே மாறுபடுகிறான்.

வன்மையோடிருக்கும் நாம் மென்மையாக இருப்பது போல் வேஷமிடாமல் இருந்தாலே மென்மை நம்மில் குடியேறும்.

எது வேஷம் என்று புரியவில் லையோ? போகட்டும் விடுங்கள்.




## ஆன்மிகத்தை வழிபாட்டில் துவங்க வேண்டும், எடுத்ததும் வேதாந்தத்தில் துவங்க கூடாது?

கார் ஓட்டச் சொன்னால் காரை முன் நோக்கி ஓட்ட வேண்டும். எடுத்ததும் பின்னோக்கி ஓட்டினால் காரின் நிலை?

கார் ஓட்டப் பழகியதும் ஓட்டுநர் உரிமம் பெற வேண்டும். உரிமம் இல்லாதவனாய் நீண்ட நாள் பயணிக்க முடியாது.

ஆன்மிகத்தை வழிபாட்டில் துவங்க வேண்டும். எடுத்ததும் வேதாந்தத்தில் துவங்க கூடாது. துவக்கமே வேதாந்தமாய் இருக்க ஒரு சிலருக்கு வாய்ப்பு இருந் திருக்கலாம். எல்லோரும் அதையே பாதையாக்கி விடக் கூடாது.

தொண்டன், சேவகன் எனும் உரிமைப் பெற்றிருத் தல் அவசியம். ஏதுமற்றவனாய் கை வீசி நடக்கும் விஞ்ஞிக்கள் ஆரம்ப காலத்தில் தேவையில்லை. (என்றுமே தேவையில்லை).

உரிமம் பெற்ற ஓட்டுனரை நம்பி பயணிகள் பயமின்றி பயணிப்பது போல் நல்லதொரு வழி காட்டியை நம்பி ஏனைய மக்களும் பக்தர்களாக பயணிக்கலாம்.

காருக்கென்று தனிப் பாதை கிடையாது ஓட்டுபவரை பொறுத்தே பாதையும், பயணமும் அமையும் என்பது போல் ஆன்மீகத்திற்கென்று தனிப்பாதை கிடையாது. செல்பவர்களைப் பொறுத்தே எல்லாம்.

எல்லாம் சரியாக இருந் தும் தர வேண்டிய லஞ்சம் சிலருக்குத் தந்தே தீர வேண்டும் என்பதாய் மக்கள் சரியானப் பாதையில் சென்றாலும் துன்பம் கொஞ்சம் வந்தே தீரும்.

எல்லாம் சகஜம் தான் சகஜமாக்கிக் கொண்டால்.

Talks With Thali

- 96009 99279

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033



# பறந்து சென்ற கருடன் சிலை



ஒருசமயம் சிற்பி ஒருவன் கருடச்சிலையை வெகு அற்புதமாக செய்து மன்னனுக்குப் பரிசளித்தான். மன்னன் அதைக் கண்டு மெய்சிலிர்த்தான். ‘இச்சிலை உயிரோட்டமாகத் திகழ்கிறது. உண்மையில் இது பறந்தால் எவ்வளவு சிறப்பு?’ என்றான் மன்னன்.

‘கற்புடைய பெண் தொட்டால் இக்கருடர் உயிர் பெற்று உலவுவார்!’ என்று சிற்பி கூற, சிற்பியின் சொல்கேட்டு மன்னன் கோபித்தான்: ‘கருடன் பறந்தால் கோயில் கட்டுவேன். இல்லை உன் தலை உன்னை விட்டுப் போகும்.’ என்று மன்னன் கூறினான்.

மன்னனின் இந்த உத்தரவை கேட்டு, சிற்பியின் மனைவி இச்சிலையைத் தொட, அது உயிர் பெற்று பறந்து சென்று பிறகு வந்து அமர்ந்த இடத்தில், மன்னன் கோயில் கட்டினான்.

கேரள மாநிலம், திரூர் அருகே உள்ள வெள்ளச் சேரியில் உள்ள இக் கோயில் கருடன் காவு என்ற பெயரில் அமைந்துள்ளது. இங்கு மூலவர் கருடாழ்வார். இறக்கைகளை விரித்து பறக்க தயாராக, நிற்கும் கோலத்தில் மேற்கு நோக்கி இருப்பது ஓர் அதிசயம்.

# ஆன்மிக மலர்கள்

## மகாலட்சுமி தந்த செல்வங்களில் வில்வமரமும் ஒன்று

“ஆதித்யவர்னே தபசோதிஜாதோ வனஸ்பதிஸ்
தவ வ்ருஷோத பில்வ: தஸ்ய பலானி தபஸா
நுதந்து மாயாந்ராயாச்ச பாஹ்யா அலக்ஷ்மி”

என்கிறது ஸ்ரீஸூக்தம்.

அதாவது, மகாலக்ஷ்மி ரைவத மன்வந்தரத்தில், வில்வ மரத்தை உருவாக்கி அதனடியில் தவம் புரிந்ததால் சாதாரண வில்வ மரம் காட்டிற்கே அரசனான மரமாக உயர்ந்ததாம்.

சரி, லட்சுமிதேவியின் எந்த பாகத்திலிருந்து இது வந்தது? பதில் தருகிறது பில்வாஷ்டகம்:

லக்ஷ்ம்யா: ஸ்தநத:
உத்பன்னம் மஹாவேன்ய ப்ரியதாம்
வில்வ விருக்ஷம் பரயச்சாமி
ஏக பில்வம் சிவார்பணம்

‘‘லட்சுமி தேவியின் இருதய ஸ்தானத்திலிருந்து பிரியம் எனும் வடிவத்தில் வந்த காரணத்தால், மகாதேவனுக்கு உகந்ததாக இருக்கும் இந்த வில்வத்தை சமர்ப்பிக்கிறேன்’’ என்பது பொருள். ஆக, மகாலட்சுமி தந்த செல்வங்களில் வில்வ மரமும் ஒன்று!







## இராவண உபதேசம்

போரில் ராமனால் வீழ்த்தப்பட்ட ராவணன் மரணப்படுக்கையில் இருந்தபோது, ராமன் பவ்யமாக அவன் காலடியில் நின்று, “இலங்கேஸ்வரா. தங்கள் ஞானம் தங்களோடு அழிந்துவிடக்கூடாது. நீங்கள் எனக்கு உபதேசிப்பதன்மூலம், அதை இந்த உலகம் அறிந்து பயன்பெற வேண்டும். எனக்கு உபதேசியுங்கள் என்று வேண்டி நின்றான்..!



ராவணன் உபதேசித்தான்...

1. உன் சாரதியிடமோ, வாயிற்காப்போனிடமோ, சகோதரனிடமோ பகை கொள்ளாதே. உடனிருந்தே கொல்வார்கள்.
2. தொடர்ந்து நீ வெற்றிவாகை சூடினாலும், எப்போதும் வெல்வோம் என்று எண்ணாதே.
3. உன் குற்றங்களை சுட்டிக் காட்டும் நண்பனை நம்பு.
4. நான், அனுமனை சிறியவன் என்று எடை போட்டதுபோல், எதிரியை எப்போதும் எளியவன் என்று எடைபோட்டுவிடாதே.
5. வானின் நட்சத்திரங்களை வளைக்க முடியும் என்று நம்பாதே. அவை நம் வழிகாட்டிகள்.
6. இறைவனை விரும்பினாலும், மறுத்தாலும் முழுமையாகச் செய்.

எதிரியாக இருந்தாலும், அவரிடமும் பல நல்ல அனுபவ விஷயங்கள் இருக்கும் என்பதை மற்றவருக்கு எடுத்துக்காட்ட இராவணனிடம், ராமன் வணங்கி உபதேசங்களை பெற்றுக் கொண்டான். பொறுமையைவிட மேலான தவமுமில்லை திருப்தியை விட மேலான இன்பமுமில்லை.

## மந்திரம் சொல்ல வேண்டிய கால அளவு

மந்திரத்தைத் தொடர்ந்து 3 நிமிடங்கள் ஜபிப்பது உங்களைச் சுற்றியுள்ள மின்சார காந்த அலைகளை தாக்கும். ரத்த ஓட்டம் சீர்படும்.

ஏழு நிமிடம் தொடர்ந்து ஜபிப்பது உங்கள் மூளை செயல் திறனைக் கூட்டும். உடல் வலுவினைக் கூட்டும். உடலைச் சுற்றியுள்ள காந்த அலைகளில் நல்ல மாறுதல்கள் ஏற்படும்.

11 நிமிடம் தொடர்ந்து மந்திரம் ஜபிப்பதும், தியானம் செய்வதும் நரம்பு மண்டலத்திலும், சுரப்பிகளிலும் நல்ல மாற்றத்தினை ஏற்படுத்தும்.

22நிமிடங்கள் தொடர்ந்து மந்திரம் ஜபிப்பதும், தியானம் செய்வதும் ஒருவரின் அழிவுப்பூர்வ, ஆக்கப்பூர்வ இரண்டும் இல்லாத நிலைகளில் தடுமாறும் மனதினை நிலைப்படுத்தி தெளிவாக சிந்திக்க வைக்கும். உள் உணர்வைக் கூட்டும்.

31 நிமிடங்கள் தொடர்ந்து ஜெபிப்பது சுரப்பிகளை சீர்ப்படுத்தும். மூச்சு சீராகும். அனைத்துத் திசுக்களும் சீர்படத் தொடங்குகின்றன.

62 நிமிடங்கள் தொடர்ந்து ஜபிக்கும் பொழுது மூளையில் ‘க்ரே’ பகுதியில் மாற்றம் ஏற்படுகின்றது. பிட்யூட்டரி, பீனியல் சுரப்பிகள் நன்கு இயங்குகின்றன.

இரண்டரை மணிநேரம் தொடர்ந்து ஜெபிக்கும் பொழுது உயர்நிலையினை மனம், மூளை அடைகின்றது. நாள் முழுவதும் ஆக்கப்பூர்வமாகவே செயல்படுவர்.



# இழந்ததை மீட்க உதவும்

# சக்கரதான மூர்த்தி




மகேசுவரமூர்த்தங்களுடன் இணைந்து மேலும் பல சிவரூபங்கள் இணைந்து சிவ உருவத் திருமேனிகள் என்று அழைக்கப்படுகின்றன.

அவ்வாறான சிவ உருவத் திருமேனிகள் மொத்தம் அறுபத்து நான்காகும். அவை:

இலிங்க மூர்த்தி,
இலிங்கோத்பவ மூர்த்தி,
முகலிங்க மூர்த்தி,
சதாசிவ மூர்த்தி,
மகா சதாசிவ மூர்த்தி,
உமாமகேஸ்வர மூர்த்தி,
சுகாசன மூர்த்தி,
உமேச மூர்த்தி,
சோமாஸ்கந்த மூர்த்தி,
சந்திரசேகர மூர்த்தி,
இடபாரூட மூர்த்தி,
இடபாந்திக மூர்த்தி,
புஜங்கலளித மூர்த்தி,
புஜங்கத்ராச மூர்த்தி,
சந்த்யான்ருத்த மூர்த்தி,
சதாநிருத்த மூர்த்தி,
சண்டதாண்டவ மூர்த்தி,
கங்காதர மூர்த்தி,
கங்காவிசர்ஜன மூர்த்தி ,
திரிபுராந்தக மூர்த்தி,
ல்யாணசுந்தர மூர்த்தி,
அர்த்தநாரீஸ்வர மூர்த்தி,
கஜயுக்த மூர்த்தி,
ஜ்வாரபக்ன மூர்த்தி,
சார்த்தூலஹர மூர்த்தி,
பாசுபத மூர்த்தி,
கங்காள மூர்த்தி,
கேசவார்த்த மூர்த்தி,
பிக்ஷாடன மூர்த்தி,
சரப மூர்த்தி,
சடேச அனுக்ரஹ மூர்த்தி,
தட்சிணாமூர்த்தி,
யோக தட்சிணாமூர்த்தி,
வீணா தட்சிணாமூர்த்தி,
காலந்தக மூர்த்தி,
காமதகன மூர்த்தி,
இலகுளேஸ்வர மூர்த்தி,
பைரவ மூர்த்தி,
ஆபத்தோத்தரண மூர்த்தி,
வடுக மூர்த்தி,
க்ஷேத்திரபால மூர்த்தி,
வீரபத்ர மூர்த்தி,
அகோர மூர்த்தி,
தட்சயஞ்யஷத மூர்த்தி,
கிராத மூர்த்தி, குரு மூர்த்தி,
அசுவாருட மூர்த்தி,
கஜாந்திக மூர்த்தி,
சலந்தரவத மூர்த்தி,
ஏகபாதத்ரி மூர்த்தி,
திரிபாதத்ரி மூர்த்தி,
ஏகபாத மூர்த்தி,
கௌரிவரப்ரத மூர்த்தி,
சக்கரதான மூர்த்தி,
கௌரிலீலாசமன்வித மூர்த்தி,
விசாபகரண மூர்த்தி,
கருடன் அருகிருந்த மூர்த்தி,
பிரம்ம சிரச்சேத மூர்த்தி,
கூர்ம சம்ஹார மூர்த்தி,
மச்ச சம்ஹார மூர்த்தி,
வராக சம்ஹார மூர்த்தி,
பிரார்த்தனா மூர்த்தி,
இரத்த பிட்சா பிரதான மூர்த்தி,
சிஷ்ய பாவ மூர்த்தி

என்பனவாகும். இதில் ஒவ்வொரு அவதாரத்திலும் ஒவ்வொரு திருவிளையாடல்கள் நடைபெற்றுள்ளன.

இந்தத் திருவிளையாடல்களில் ஒன்று, மகா விஷ்ணுவிற்கு சிவபெருமான் சக்கரத்தை தானம் செய்யும்போது நடைபெற்றதால் அந்தத் திருமேனிக்கு சக்கரதான மூர்த்தி என்று பெயர்.

சக்கரதான மூர்த்தி என்று பெயர் காரணம் ஏற்பட்ட சுவாரஸ்யமான வரலாற்றை காண்போம்.

சலந்தரன் இறைவனின் கோபத்தில் இருந்து தோன்றிய அசுரன், இறைவனை தவிர யாராலும் அவனை அழிக்க முடியாத வல்லமை பெற்ற அவன், சகல உலகங்களையும் வெற்றி கொண்டு திருக்கயிலாயம் நோக்கி இறைவனிடம் போரிட வந்தான், இறைவன் ஓர் முதியவர் வடிவில் ஆங்கோர் இடத்தில் அமர்ந்து, "யாரப்பா நீ??" என்றார்.

"நான் சலந்தரன்!! கயிலாயத்தை வெல்ல வந்தேன்" என்றான் அவன்.

"கயிலாயத்தை வெல்ல உனக்கு வலிமை போதாது!!" என்றார் கிழவர் வடிவிலிருந்த சிவபெருமான்.

"கிழவரே!! என்னை பற்றி உமக்கு தெரியாது!!"

"சரி தெரிந்து கொள்கிறேன்!! உன் வலிமையை சோதித்து பார்ப்போம்!! நான் தரையில் ஒரு சக்கரம் வரைவேன் அதனை நீ பெயர்த்து தலைக்கு மேல் தூக்கினால் வலிமையானவன் என்று ஒப்புகொள்கிறேன்" என்ற இறைவன்.

தன் கால்விரலால் தரையில் ஒரு சக்கரம் வரைந்தார்

"த்தூ!! கேவலம் மண்ணை பேர்த்து தலையில் வைப்பது ஒரு சோதனையா??" என்ற சலந்தரன் குனிந்து சக்கர வடிவத்தை நகத்தால் கீறி அடியில் விரல்களை நுழைத்து தூக்க முயற்சித்தான்..

சக்கரம் தரையில் இருந்து விடுபட்ட உடனேயே அதி வேகமாக சுழல துவங்கியது!!

சுழலும் அந்த சக்கரத்தை முக்கி முனகி இரு கைகளால் ஏந்தி தலைக்கு மேல் தூக்கிய சலந்தரன் அதனை தாங்க வலிமையின்றி நழுவ விட அது அவனை இருகூறாக பிளந்து கொண்டு உருண்டது சக்கரம். அந்த சக்கரத்தை சிவபெருமான் தன் திருக்கரத்தில் தாங்கி கொண்டான்!!

இதே சமயம், குபன் எனும் மன்னருக்காக ததீசி என்ற தவவலிமை மிகுந்த முனிவரிடம் திருமால் போரிட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. போர் உக்கிரம் அடைந்தது, அப்போது ததீசி முனிவர் மீது திருமால் தனது சக்கராயுதத்தினை ஏவினார். ஆனால் அச்சக்ராயுதம் ததீசி முனிவரின் தவவலிமையால் செயலற்றுப்போனது. ஆகவே உலகினைக் காக்கும் பொருட்டு திருமாலுக்கு மீண்டும் சக்ராயுதம் தேவைப்பட்டது.

மஹாவிஷ்னுவின் கையில் இருந்த சக்கராயுதம் தேய்ந்து போனபோது, ஆற்றல் பொருந்திய சக்கரம் பெறுவதற்காக மஹாவிஷ்னு சிவபெருமானை பூஜித்தார்.

இந்த நிகழ்வுகள் குறித்து பல்வேறு புராணத் தகவல்கள் உண்டு. அப்படி சிவபெருமானை விஷ்னு பூஜித்ததாக, திருமாற்பேறு, திருப்பைஞ் ஞீலி, திருவீழிமிழலை ஆகிய சிவஸ்தலங்களின் தல புராண வரலாறுகள் கூறுகின்றன.

இம்மூன்று தலங்களில் திருவீழிமிழலை மிகவும் முக்கியமானதாக கருதப்படுகிறது. திருமாலுக்கு உலகினைக் காக்க சக்கராயுதம் தேவைப்படுகிறது. அதைப் பெருவதற்காக திருவீழிமிழலையில் சிவபெருமானிடம் வருகிறார்.

அந்த சமயம், ஆயிரம் தாமரை மலர்களால் சிவனை அர்ச்சித்தால் என்னியது கிடைக்கும் என்று அறிகிறார். அதன்படி ஆயிரம் தாமரை மலர்கள் சேர்த்து அர்ச்சனை செய்ய ஆரம்பிக்கிறார். விஷ்ணுவின் சிவ பக்தியை சோதிக்க, சிவபெருமான் ஆயிரம் மலர்களில் ஒன்றை மறைத்துவிடுகிறார்.

மகாவிஷ்ணு பூஜை முடியும் தருவாயில் 999 மலர்களால் அர்ச்சனை செய்து விடுகிறார். ஆயிரமாவது மலர் இல்லை. இன்னொரு தாமரை மலரைக் கொண்டு வந்து அர்ச்சனையை தொடர நேரமும் இல்லை.

ஒரு மலர் குறைவதால் தனது பூஜைக்கு கலங்கம் வந்துவிடக்கூடாது என்பதால், குறைந்த ஒரு மலருக்குப் பதிலாக தாமரை மலருக்கு ஒப்பான தனது இரு கண்களில் ஒன்றையே பெயர்த்து எடுத்து பூஜையை குறை இல்லாமல் முடித்தவுடன் மகாவிஷ்ணுவிற்கு சிவபெருமான் காட்சி கொடுத்து, திருமால் விரும்பியபடி அவருக்கு சக்கராயுதம் கொடுத்து அருள் செய்கிறார். இப்படி மஹாவிஷ்னு தன் கண்ணையே கொடுத்து சிவனை அர்ச்சித்த தலம் தான் திருவீழிமிழலை.

சர்வ வல்லமை வாய்ந்த, சக்கரத்தாழ்வாராக விளங்கும் சக்கரத்தை சிவபெருமான் மகாவிஷ்ணுவிற்கு கொடுத்ததால் அன்று முதல் இத்தலத்தில் சிவபெருமான் சக்கரதான மூர்த்தியாக விளங்குகிறார்.

இந்த சக்கரதான மூர்த்தியை வணங்கினால், தொலைந்த பொருட்கள் கிடைப்பதுடன், பல வழிகளில் நிம்மதி இழந்தவர்களுக்கும், வாழக்கையில் புத்துணர்ச்சியுடன் கூடிய மகிழ்ச்சியான வாழ்க்கை அமையும்.

– ஸ்ரீபதி



www.aanmeegamalar.com

ஆன்மிகமலர் மெயில் புக்



# அடியவர்தான் பெரியவர்



ஆன்மிக வாழ்க்கையில் எது பெரியது எது சிரியது என்று தெரியாமல் தவிப்போர் பலர் இருக்கும் போது, இதற்கு சரியான தீர்வு கிடைக்க முருகப் பெருமான் ஔவையார் மூலம் உலகுக்கு உணர்த்துவதே கந்தனின் லீலைகள்.

ஔவையிடம் முருகப்பெருமான் உலகில் எது பெரியது? என்று கேட்க, ஔவை தரும் விளக்கம்தான் இது.

இந்த உலகில் எது பெரியது என்று கேட்டால், இந்த உலகம் தான் பெரியது.

ஆனால் இந்த உலகமோ நான்முகனான பிரம்மனின் படைப்பு. பிரம்மன் தான் பெரியவன்,

பிரம்மன் பெரியவன் என்றால் பிரம்மனோ திருமாலின் தொப்புளில் பிறந்தவர். சரி திருமால்தான் பெரியவர் என்று கருதினால்

திருமாலோ கடலில் துயில் கொண்டிருப்பவர்.

சரி கடல்தான் பெரியது என்று முடிவிற்கு வந்தால்

அந்த கடல் அகத்தியரின் கமண்டலத்தில் அடக்கம்.

அப்போ அகத்தியர்தான் பெரியவர் என்று கருதினால் அகத்தியர் குடுவையில் பிறந்தவர்.

அப்படியானால் குடுவைதான் பெரியதா என்று வினா எழுப்பினால்

குடுவை இந்த உலகில் உள்ள மண்ணால் ஆனது

சரி மண் தான் பெரியது என்று எடுத்துக் கொள்ளலாமா என்றால்

மண்ணோ ஆதிசேஷன் என்னும் பாம்பு தலையில் தாங்கி கொண்டிருக்கிறது.

சரி ஆதிஷேசன் தான் பெரியது என்று முடிவிற்கு வந்தால்

அந்த ஆதிசேஷமானது உமையாள் கை விரல் மோதிரத்தில் அடக்கம்.

உமையாளே பெரியவள் என்று கருதினால்

உமையாளோ சிவனின் ஒரு பகுதி.

சிவன் தான் பெரியவன் என்று முடிவிற்கு வந்தால்

அந்த சிவனோ அடியவரின் நெஞ்சில் ஒடுக்கம்.

ஆக அடியவர்தான் பெரியவர்.

Owned, Published by C.NAGARAJAN. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.Nagarajan,
E-mail: aanmeegamalar@gmail.com Website: http://www.aanmeegamalar.com Cell: 7299992699

ஆன்மிகமலர் மெயில் புக்



www.aanmeegamalar.com

# மதத்தின் ரகசியம் கொள்கைகளில் இல்லை, செயல்முறையில் தான் உள்ளது



- மனிதனின் ஏற்கனவே இருக்கின்ற தெய்வீகத்தை வெளிப் படுத்துவது மதம்.
- மதம் என்பது ஆன்மா சம்பந்தப்பட்டது,சமூக விஷயங்களில் தலையிட அதற்கு எந்த உரிமையும் இல்லை குறிப்பாக நீங்கள் நினைவில் வைக்க வேண்டும். ஏற்கனவே விளைந்துள்ள தீமைகள் அனைத்தும் அப்படி தலையிட்டதன் காரணமாகவே என்பதையும் மறக்கக் கூடாது.
- ஒருமதம் பயனுள்ளதாக இருக்க வேண்டுமானால் அது உத்வேகம் மிக்கதாக இருக்க வேண்டும். அதே வேளையில் அதில் உட்பிரிவுகள் பெருகிக் கொண்டே போகின்ற அபாயத்தை தடுக்க வேண்டும். பிரி வினை வாதம் அற்ற பிரிவாக இருப்பதன் மூலம் இதை நாம் தடுக்க முடியும்; ஏனெனில் இதில் ஒரு பிரிவிற்கான அனுகூலங்கள் அனைத்தும் இருக் கும், உலகம் தழுவிய ஒரு மாதத்திற்கான பரந்த தன்மையும் இருக்கும். எப்போது ஆன்மா ‘அன்பான இறைவனின்’ தேவையை ஆசையை, ஏக்கத்தை உணருமோ அப்போதுதான் மத உணர்வே ஆரம்பிக்கிறது, அதற்கு முன்பு அல்ல.
- மதத்தின் ரகசியம் கொள்கைகளில் இல்லை, செயல்முறையில் தான் உள்ளது. நல்லவனாக இருப்பது, நன்மை செய்வது இதுதான் மதத்தின் முழுப்பரிமாணம்.
- புலன்களுக்கு அடிமையாவதைத் தடுக்கும் ஆசை தோன்றும்போதுதான் மனிதனின் இதயத்தில் மத உணர்வு உதயமாகிறது. ஆகவே மனிதன் புலன் களுக்கு அடிமையாகாமல் தடுப்பதும், அவன் தன் சுதந்திரத்தை வலியுறுத்த உதவி செய்வதும் தான் மதத்தின் முழுநோக்கம்.

– விவேகானந்தர்

ஆன்மிகமலர் மெயில் புக்
www.aanmeegamalar.com